விலை : 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-3861)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 05 வெள்ளிக்கிழமை (21.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

## மீண்டுமொரு இனப்பிரச்சினைக்கு இடமளிக்காது

# வடக்கு அபிவிருத்தியில் அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது



### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(திருகோணமலை)

மீண்டுமொரு இனரீதியான பிரச்சினைகளுக்கு இடமளிக்காமல் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அபிவிருத்தி உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### கைதிகளின் விடுதலைக்கு போராடுவோம்

## பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பல்கலை மாணவர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலையை வலியுறுத்தி உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்காக போராடுவோம் என பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பல்கலை மாணவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 14 ஆம் திகதியில் இருந்து உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 23

## மக்களின் காணிகளை விடுவிப்பதில் இராணுவம் உறுதியாக உள்ளது

### யாழ் மாவட்ட கட்டளை தளபதி ஹெட்டியாராச்சி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்களின் காணிகளை மக்களிடம் வழங்குவதற்கு இராணுவம் உறுதியாக உள்ளது என பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் 23

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா சேமமடு பகுதியில் வயோதிபர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ள 23

## பொருள் வாங்குவது போல் பாசாங்கு செய்து தங்கச்சங்கிலி அபகரிப்பு

(கரணவாய்)

கடைக்கு பொருட்கள் வாங்குவது போல் பாசாங்கு செய்துவிட்டு பெண்மணியின் தங்கச் சங்கிலியின் அரைவாசியை அறுத்துக் கொண்டு திருடன் ஒருவன் தப்பிச் சென்ற சம்பவம் வடமராட்சி குஞ்சர் கடையடிப் பகுதியில் இடம் 23

## போரில் பொதுமக்களின் உயிரிழப்புக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்



### ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் பர்ஹன் ஹக் தெரிவிப்பு

(கொழும்பு)

போரின் இறுதிக் கட்டத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக, இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டியது அவசியம் என ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார். 23

## கிளிநொச்சியில் வெடிபொருட்கள் நேற்று கண்டெடுப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி. உருத்திரபுரம் பகுதியில் வெடிபொருட்கள் நேற்று 23

### யாழ் அராலிப் பகுதியில்

## கசிப்பு தயாரித்தவர் பொலிஸாரால் கைது



23

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

### யாழில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. தமது விடுதலையை வலி 23

### இராணுவ புலனாய்வு அதிகாரி

## குற்றப் புலனாய்வு பிரிவால் நேற்று இரவு கைது

(கொழும்பு)

இராணுவ புலனாய்வு அதிகாரி லெப்டினன்ட் கேணல் எரந்த பீரிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். ஊடகவியிலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பிலேயே 23

### யுத்தத்திற்குப் பின்னரும் தமிழர் மீது

## படையினரின் பாலியல் வன்முறை தொடர்கின்றன

### சர்வதேச அமைப்பு அறிக்கை

(ஜெனிவா)

யுத்தத்துக்குப் பின்னர் சமகாலத்திலும் பாலியல் வன்முறைகள் அதிகரித்த அளவில் இடம்பெறுவதாக உண்மைக்கும் நீதிக்குமான வேலைத்திட்டத்தின் சர்வ 23

## அரசியல் கைதிகளை பகடைக்காய்களாக பயன்படுத்தவா நடவடிக்கை எடுக்கவில்லை?



### ஜனாதிபதியிடம் கேள்வி கேட்டு விக்னேஸ்வரன் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தவா அவர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்காது தாமதிக்கின்றீர்களோ? என கேள்வி கேட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கு 23

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)

**கிளினிக் நடைபெறும் திகதி:**

பரந்தனில் 22.09.2018 (நாளையதினம்)

யாழ்ப்பாணத்தில் 29.09.2018

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

**I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை**

ஒமெகா இன்,
இல.101, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
(2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)

பல நோக்கு கூட்டுறவு
சங்க கட்டடம்,
பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்பு: 0774405969, 0774441082

(C-3856)


# வயோதிபரைக் காணவில்லை

(கரணவாய்)

வவுனியாவிற்கு செல்வதாக கூறி புறப்பட்ட வயோதிபர் ஒருவர் வீடு திரும்பவில்லை என நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இம் மாதம் 13ஆந் திகதி கல்லுவம் இமையாளன் மேற்கைச் சேர்ந்த செல்லையா சிவஞானம் ( வயது-67) என்பவர் வவுனியா வேப்பம்குளத்திற்கு செல்வதாக கூறிச் சென்றதாகவும் ஆனால் அவர் அங்கும் செல்லவில்லை, வீட்டிற்கும் திரும்பி வரவில்லை.

இதனையடுத்து அவரின் மகன் நேற்று வியாழக்கிழமை நெல்லியடி பொலிஸில் முறையிட்டுள்ளார். (ம-60)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மணிவிழா வாழ்த்து



22.09.2018இல் தனது 60ஆம் அகவையையும் 37 வருட சேவையையும் கடக்கும்

திருமதி **பிரேமாவதி செல்வராஜா** (SLTS-I)

(யா/ஹாட்லிக் கல்லூரி- Special English Trained Diploma in English)

Congratulations

**சேவை விபரம்**

1.வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம்:- 10.05.1982-28.02.1984
2.மிது/போலவலான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி:- 01.03.1984-31.12.1985
3.வ/நொச்சிமோட்டை மத்திய கல்லூரி:- 01.01.1986-14.08.1989
4.யா/தேவரையாளி இந்துக் கல்லூரி:- 15.08.1989-10.05.2010
5.யா/ஹாட்லிக் கல்லூரி:- 11.05.2010-இன்று வரை 37 வருடங்கள்

அரசடி விநாயகர் அருள்பெற்று எந்நாளும்
அகிலவுலகமும் பேசும் ஆங்கில கல்விதனை போதித்து
அகவை அறுபதை அவனியில் கொண்டாடும்
அக்காவே பல்லாண்டு வாழ்க!

**தங்கைமார்: நிர்மலா சிவராஜசிங்கம் குடும்பம் (சுவிஸ்)**
**பிரியதர்சினி விமலசுந்தரம் குடும்பம் (டென்மார்க்)**

(சி-3885)


**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

*சட்டமாணி நுழைவு
*ஆசிரியர் தெரிவு
*புலனாய்வு உத்தியோகத்தர்
*சுங்க பரிசோதகர்
*சுங்க அத்தியட்சகர்
*NSB Bank
*SLAS
*SLEAS
*PGDE,M.Ed

பரீட்சைகளுக் கான வகுப்புக்கள் **யாழ் நகரில்**
**0766883394**
உடன் தொடர்பு கொள்ளலாம்.

(சி-3856)


## அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 23.08.2018 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் இராசையா அருந்ததிப்பிள்ளை (பூமணி)**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 22.09.2018 சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்று பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(5739)

தில்லைகட்டி,
சுன்னாகம்.

-குடும்பத்தினர்
0776136767

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 - 08 - 1938



ஆண்டவன் அடியில் 16 - 10 - 2017

**அமரர் சின்னத்தம்பி பொன்னம்மா**

திதி:- துவாதசி (21.09.2018)

ஆலமரமாய் நிழல் தந்தாயே அம்மம்மா
அன்பின் சிகரமாய் உயர்ந்தாயே அம்மம்மா
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாகவே இருந்தோமே அம்மம்மா
பாசமுடன் எம்மையெல்லாம் வளர்த்தாயே அம்மம்மா
எம்மை பரிதவிக்க விட்டு எங்கே சென்றாய் அம்மம்மா
உன் குரல் கேளாமல் ஓராண்டு கடந்து சென்றதே அம்மம்மா
உன்னை மறக்க முடியாமல் கலங்கி தவிக்கிறோம் அம்மம்மா
ஓராயிரம் ஆண்டானாலும் ஆறுமோ துயர் அம்மம்மா

(5742)

இன்னாவத்தை, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை 0778570730

என்றும் உன் நினைவில் வாழும்
அன்பு பேரன்கள்-திலக்ஷன், அகீபன்

## மரண அறிவித்தல்

**தில்லையம்பலம் கஜேந்திரகுமார் (கஜன்)**

(அபிவிருத்தி உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்)



வைரவர் கோயிலடி ஆனைக்கோட்டை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கஜேந்திரகுமார் நேற்று (20.09.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லையம்பலம்-நாகபூரணம் ஆகியோரின் அன்பு மகனும் சசிகலா (ஆசிரியர் நவாலி ம.வி), திலீப்குமார் (நவசிகடை கொற்றாவத்தை), சிவகுமார் (வைத்தியர், ஜப்பான்), சாந்தகுமார் (ஆசிரியர்-யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்) மோகனகுமார் (அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்), முகுந்தன் (மருத்துவர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராஜசேகரம், அன்பரசி, நிஷானி, சுதர்ஜனா, நிசாந்தினி ஆகியோரின் மைத்துனரும் துவாரகா, விதுரன் ஆகியோரின் மாமனாரும் சதுர்சிகா, ஆதிஷன், அனுஸ்கவி, லதுசாந், ரிஷிகா ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஆவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி,
ஆனைக்கோட்டை மேற்கு,
ஆனைக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்
0775565060

(5743)

# இலங்கைத் தமிழர் படுகொலை போர்க்குற்றமே!

## காங்கிரஸ் மற்றும் தி.மு.க. தண்டிக்கப்பட வேண்டும்; இ.பி.எஸ். – ஓ.பி.எஸ். தலைமையில் அ.தி.மு.க. வலியுறுத்து

(சென்னை)

இலங்கைத் தமிழர் படுகொலைக்கு உடந்தையாகச் செயற்பட்ட காங்கிரஸ் மற்றும் தி.மு.க.வின் செயற்பாடு போர்க்குற்றமே என, தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற, அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.



இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு யுத்தத்தின் போது, இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைக்கு காங்கிரஸ் மற்றும் தி.மு.க. கூட்டணி உதவியமையை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஒப்புக் கொண்டுள்ளார்.

எனவே அது மிகப்பெரிய போர்க்குற்றம் என்பதை கருத்தில் கொண்டு, காங்கிரஸ் மற்றும் தி.மு.கவிற்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்" என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த போர்க்குற்றச் செயலை கண்டிக்கும் வகையில், எதிர்வரும் 25 ஆம் திகதி கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தப்படும் என்றும், குறித்த கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில், 'இலங்கை போரின் போது இந்திய அரசாங்கம் மற்றும் ஏனைய சில நாடுகளும் உதவி புரிந்தன என்றும், தாம் தமிழர்களை அழிக்கவில்லை தீவிரவாதத்தையே அழித்தோம்' என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில், இலங்கையில் இடம்பெற்றது மனித உரிமை மீறல் என்றும், இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் விடையின்றி நீடிக்கிறது.

இதனால் குறித்த போர்க்குற்றத்திற்கு உடந்தையாக செயற்பட்ட காங்கிரஸ் மற்றும் தி.மு.க. தண்டிக்கப்பட வேண்டும் என, தற்போதைய தமிழக அரசு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### ஆறாம் தரம் முதல் 11 ஆம் தரம் வரையான பாடவிதானங்களில் சட்டத்தை உள்வாங்கி மாணவர்களை தெளிவூட்ட நடவடிக்கை

#### நீதியமைச்சர் தலதா தகவல்

(கொழும்பு)

நாட்டு சட்டம் தொடர்பில் பாடசாலை பாடவிதானங்களில் உள்வாங்கி மாணவர்களை தெளிவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதன்மூலம் மாணவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பான சட்டத்தை கற்பிக்கமுடியும் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நாட்டு சட்டம் தொடர்பில் பாடசாலைகளில் தெளிவூட்டும்வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளேன்.

பாடசாலையின் ஆறாம் தரத்தின் பாடவிதானத்தில் சட்டம் தொடர்பான பாடம் ஒன்றை உள்வாங்கவிருக்கின்றோம். இதன்போது சட்டம் என்றால் என்ன, சட்டத்தை மீறினால் ஏற்படும் தண்டனை மற்றும் அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தினால் கிடைக்கும் தண்டனை போன்றன உள்வாங்க இருக்கின்றோம்.

அத்துடன் நாட்டின் சட்டம் தொடர்பில் ஆறாம் தரத்தில் இருந்து 11ஆம் தரம் வரை படிப்படியாக கற்பிக்க



நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

11ஆம் தரத்தில் நாட்டின் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் தண்டனை வழங்க முடியுமானவை மற்றும் எவ்வகையான தண்டனை என்பது தொடர்பில் கற்பிக்கவுள்ளோம். அதே போன்று மரண தண்டனை வழங்கக்கூடிய விடயங்களும் கற்பிக்கப்படும் என தெரிவித்தார். (இ-7)

### ஐ.நாவிற்கு விஜயம் மேற்கொள்ளும் போது ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

#### நாடு கடந்த தமிழீழ அரசு அறிவிப்பு

(ஜெனீவா)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்தவாரம் ஐ.நாவிற்கு விஜயம் மேற்கொள்ளும் வேளை அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஜனாதிபதி 25ஆம் திகதி உரையாற்றவுள்ளார்.

இந்நிலையிலேயே அவரின் வருகையின் போது ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது. இறுதி யுத்தத்தின் போது பெருமளவு தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கும் மைத்திரிபால சிறிசேன காரணம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பெருமளவு தமிழ் மக்கள் கொல்லப்பட்டவேளை தானே பதில் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றியதை மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ளார் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்களும் கொல்லப்பட்டனர். இவ்வாறு சரணடைந்தவர்களில் குழந்தைகளும் சிறுவர்களும் காணப்பட்டனர். அவர்கள் சரணடைந்து பத்து வருடங்களாகி விட்ட போதிலும் இன்னமும் அவர்களிற்கு என்ன நடந்தது என்பது தெரியாமலுள்ளது எனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

### பொலிஸ்மா அதிபர் பூஜிதவை பதவி விலகக் கோரவில்லை

#### சட்டம் ஒழுங்கு அமைச்சு விளக்கம்

பொலிஸ்மா அதிபரை பதவி விலகுமாறு எவ்வித கோரிக்கையும் முன்வைக்கவில்லை என சட்டம் மற்றும் ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார். பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவை இரண்டு வாரங்களுக்கு பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகி வந்த நிலையிலேயே அவர் இவ்வாறு மறுப்பு வெளியிட்டுள்ளார். (இ-7)



### தமிழ் இளைஞன் படுகொலை இரத்தினபுரியில் பதற்றம்

(இரத்தினபுரி)

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக செயற்பட்டு வந்த தமிழ் இளைஞரொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இரத்தினபுரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் வேளையில், இனந்தெரியாத நபர்களால் கடத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து குறித்த பகுதியில் நேற்றும் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவியது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சில சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபர் கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# அரசியல்வாதிகளோ, உள்ளூராட்சி மன்றங்களோ நினைவேந்தல்களை பொறுப்பேற்று நடத்தக்கூடாது

## முன்னாள் போராளி காக்காண்ணா தெரிவிப்பு

தியாகி திலீபனின் நினைவு அனுஷ்டிப்பு தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி மு.மனோகர் (காக்காண்ணா) விடுத்த அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளே நினைவேந்தல் நிகழ்வுகளைப் பொறுப்பேற்பது என்பது தவறான முன்னுதாரணம். இன்று திலீபன் நினைவு நாளை யாழ். மாநகர சபை நடத்தினால் நாளை ஆட்காட்டிவெளி மற்றும் பண்டிவிரிச்சான் துயிலும் இல்லங்களை அந்தந்தப் பிரதேச சபைகள் பொறுப்பெடுப்பதை தவிர்க்க முடியாமல் போகும். இந்த இரு சபைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழுள்ளன.

கடந்த 15 ஆம் நாள் நடைபெற்ற நிகழ்வுகள் வேதனையளிக்கின்றன. ஒரு கட்சி முற்பகல் 10.10இற்கு நிகழ்வு என்றது.

சில நாட்களின் பின் இன்னொரு கட்சி காலை 09.30 இற்கு நிகழ்வு என்றது. இதில் அஞ்சலி என்பதை விட, அடுத்தவனின் காலை வாருவதே முக்கியமானதாக கட்சிகளுக்குத் தெரிந்தது.

மேலும் அங்கு நடைபெற்ற நிகழ்வுகள் உணர்வுள்ள தமிழர்களுக்குக் கவலையளித்தன. தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த காலத்தில் அவனைப் பார்த்திருந்த ஒரு சிலரைத் தவிர ஏனையோர்தான் சச்சரவில்மும் முரமாக ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மனதில் திலீபனின் நினைவு எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை எமக்கு உணர்த்தியது.

இதில் சம்பந்தப்பட்ட ஒரு கட்சி அன்னை பூபதியின் நிகழ்விலும் இவ்வாறான கோளாறை ஏற்படுத்தியது. உண்ணாவிரதம் தொடங்குவதற்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளருடன் சேர்ந்து அன்னை பூபதியின் சகோதரியை சுடரேற்ற வைத்து நாமே அன்னைக்கு முதலில் அஞ்சலி செலுத்தினோம் எனப் படம் காட்டியது.

ஓர் ஒழுக்கமான கீழ்ப்படிவுள்ள சிப்பாயே பின்னர் படையணிகளை சரியாக நெறிப்படுத்தும் தளபதியாக விளங்குவான் என்பது எமது தலைவரின் கூற்று. யூ.எஸ்.ஹோட்டலிலும் மாகாண சபையிலும் ஒரு சிலர் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்த எமக்கு இவர்கள் இந்நிகழ்வைப் பொறுப்பெடுப்பது திலீபனின் ஆன்மாவுக்குச் செய்யும் துரோகமாகவே தென்படுகின்றது.

செப்ரெம்பர் 26 என்றாலே தியாகி திலீபனின் நாளும் யாழ். கோட்டையும்தான் நினைவுக்கு வரும். அந்த நினைப்பே இல்லாமல்தான், நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் தூபிக்குப் பக்கத்தில் ... இன்சூரன்ஸ் சார்பில் பந்தல் போட்டு சினிமாப் பாடல்களை அலறவிட்டு நடைபெற்ற கொண்டாட்டங்களில் கலந்து கொண்டவர் எவர் என்பதை மக்கள் அறிவர்.

மனம் பொறுக்காமல் யாரோ ஒருவர் இன்று திலீபனின் நினைவு நாள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் போல இருக்கிறது. சம்பந்தப்பட்டவர் சப்பாத்துடன் அஞ்சலி செலுத்தப் போனமையும் எமக்கு ஞாபகம் இருக்கிறது.

எனவே திலீபனின் நினைவு நிகழ்வு மட்டுமல்லாது எதிர்வரும் மாவீரர் நாள் சம்பந்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் அரசியல்வாதிகளோ, உள்ளூராட்சி மன்றங்களோ தலையிடாது அதன் உறுப்பினர்கள் சாதாரண பிரஜைகளாக கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானை அடித்து காலி பண்ணியது இந்தியா

## புவனேஸ்வர், ஜாதவ், ரோகித் அசத்தல்



பாகிஸ்தானின் முக்கிய விக்கெட்டுக்களை கொய்த இந்தியாவின் புவனேஸ்வர்

ஹொங் கொங் அணியுடனே மல்லுக்கட்டிய இந்தியாவால் சமதையான பாகிஸ்தானை என்ன தைரியத்தோடு எதிர்கொள்ளப் போகிறது என்று எதிர்பார்த்தவேளை கிளர்ந்தெழுந்த இந்தியா பாகிஸ்தானை 126 பந்துகள் மீதமிருக்கையிலேயே அடித்து காலியாக்கியது. அணித் தலைவர் ரோகித் சர்மா அரை சதம் விளாசி அசத்தினார்.

14ஆவது ஆசிய கிண்ண போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடைபெறுகிறது.

இதில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி தனது இரண்டாவது போட்டியில் பாகிஸ்தானை சந்தித்தது.

கிரிக்கெட் உலகின் மிகப் பெரிய மோதலாக பார்க்கப்பட்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் ஷர்துல் தாகூர், கலீல் அகமட் நீக்கப்பட்டு பும்ரா, 'சகலதுறை வீரர்' பாண்ட்யா சேர்க்கப்பட்டனர்.

**பும்ரா 'மெய்டன்'**

பாகிஸ்தான் அணிக்கு பகர் ஜமான், இமாம் உல் ஹக் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. புவனேஷ்வர் வீசிய முதல் ஓவரில் இமாம் 2 ஓட்டங்கள் எடுத்தார். மறுபக்கம் பும்ரா 144, 145 கி.மீ., வேகத்தில் பந்து வீசினார். தனது முதல் இரண்டு ஓவர்களிலும் ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 'மெய்டனாக' வீசினார்.

**புவனேஷ்வர் அபாரம்**

இதனால் புவனேஷ்வர் ஓவரில் ஓட்டம் எடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட, இது இந்திய அணிக்கு சாதகம் ஆனது. முதலில் இமாம் (2) புவனேஷ்வர் பந்தில் தோனியிடம் 'பிடி' கொடுத்தார். சம்பியன்ஸ் டிரொபி இறுதியில் சதம் அடித்த பகர் ஜமான், புவனேஷ்வர் வேகத்தில் 'டக்' அவுட்டானார். இதனால் பாகிஸ்தான் அணி 4.1 ஓவர்களில் 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து பரிதவித்தது.

**குல்தீப் கலக்கல்**

பின் பாபர் அசம், சோயப் மலிக் இணைந்தனர். சோயப் மலிக் 26 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது தோனி தயவில் தப்பினார். இந்நிலையில் குல்தீப் பந்தை, கிரீசை விட்டு வெளியே வந்து அடிக்க முயன்ற பாபர் (47) போல்டானார். சிக்சருக்கு ஆசைப்பட்ட சர்பராஸ் 6 ஓட்டங்களில் கேதர் ஜாதவ் சுழலில் ஆட்டமிழந்தார்.

**கேதர் அசத்தல்**

சோயப் மலிக் (43), அம்பதி ராயுடுவின் துல்லிய 'த்ரோ' காரணமாக ரன் அவுட்டாக இந்திய ரசிகர்கள் நிம்மதி அடைந்தனர். குல்தீப் பந்தில் சிக்சர் அடித்த ஆசிப் அலியை (9) கேதர் ஜாதவ் வெளியேற்றினார். ஒரு கட்டத்தில் 85/2 என வலுவாக இருந்த பாகிஸ்தான் அணி 110 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது. ஷதப் கான் (8) கேதர் ஜாதவ் பந்தில் 'ஸ்டம்ட்' ஆனார். பகீம் அஷ்ரப் (21) பும்ராவிடம் வீழ்ந்தார்.

43.1 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 162 ஓட்டங்களுக்கு சுருண்டது. அமிர் (18) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் கேதர் ஜாதவ், புவனேஷ்வர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**ரோகித் அரைச்சதம்**

சுண்டங்காய் இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. உஸ்மான் பந்தில் ரோகித்தும் மொஹமட் அமிர் பந்தில் தவானும் பவுண்டரி அடித்தனர். உஸ்மான் வீசிய பவுன்சரை சிக்சருக்கு அனுப்பினார் ரோகித். இதே ஓவரில் மீண் டும் இவர் சிக்சர் அடிக்க, 19 ஓட்டங்கள் கிடைத்தன. இவருக்கு 'கம்பெனி' கொடுத்த தவான், தன் பங்கிற்கு பகீம் பந்துகளில் பவுண்டரிகள் அடித்தார்.

இந்திய அணியின் ஓட்டஎண்ணிக்கை 'மின்னல்' வேகத்தில் உயர்ந்தது. ஹசன் அலி ஓவரில் சிக்சர், பவுண்டரி அடித்த ரோகித் ஒருநாள் அரங்கில் 35ஆவது அரை சதம் (36 பந்து) அடித்தார். இவர் 52 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். சில நிமிட இடைவெளியில் தவான் (46) கிளம்பினாலும் இந்திய அணி வெற்றியை வேகமாக நெருங்கியது.

பின் இணைந்த கார்த்திக், ராயுடு ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை உறுதி செய்தனர். கடைசியில் ராயுடு ஒரு 'சுப்பர்' பவுண்டரி அடிக்க, இந்தியா 29 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

**இது பெஸ்ட்**

நேற்று 9 ஓவர்கள் பந்துவீசிய இந்தியாவின் கேதர் ஜாதவ் 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இது இவரது சிறந்த பந்துவீச்சாக அமைந்தது. இதற்கு முன் நியூசிலாந்துக்கு எதிரான மொகாலி போட்டியில் (2016), 5 ஓவர்களில் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருந்தார்.

**மீண்டும் மோதல்**

ஆசிய கிண்ண 'ஏ' பிரிவில் இந்தியா (4 புள்ளி), பாகிஸ்தான் (2), 'பி' பிரிவில் பங்களாதேஷ் (2), ஆப்கானிஸ்தான் (2) என நான்கு அணிகள் 'சுப்பர் 4' சுற்றுக்கு முன்னேறின. இந்த நான்கு அணிகளும் மீண்டும் ஒரு முறை மோதும். முடிவில் முதல் இரு இடம்பெறும் அணிகள் செப். 28ஆம் திகதி நடக்கும் இறுதிக்கு முன்னேறும். இதன்படி, வரும் 23ஆம் திகதி நடக்கும் 'சுப்பர் 4' சுற்றில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மீண்டும் மோதவுள்ளன.

**126**

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் அரங்கில் அதிக பந்துகள் மீதமுள்ள நிலையில் இந்தியா (126 பந்து) பெற்ற வெற்றிகளில் இது 'நம்பர் 1' ஆக அமைந்தது. இதற்கு முன் 2006ல் பாகிஸ்தானின் முல்தானில் நடந்த போட்டியில் இந்தியா 105 பந்துகள் மீதமுள்ள நிலையில் வென்றது.

**24**

பாகிஸ்தான் ஒருநாள் அணியில் அதிக முறை 'ரன் அவுட்டான' வீரர்களில் மூன்றாவது இடத்தை மியாண்டாட், சலீம் மலிக்குடன் பகிர்ந்து கொண்டார் சோயப் மலிக் (தலா 24). முதல் இரு இடத்தில் இன்சமாம் (40), வாசிம் அக்ரம், மொஹமட் யூசுப் (தலா 38) உள்ளனர்.

**ஷதாப் காயம்**

தனது முதல் ஓவரை வீசிய ஷதப் கான், முதல் பந்தில் ரோகித்தை போல்டாக்கினார். 2 ஆவது ஓவரின் 3ஆவது பந்தை வீசிய இவருக்கு முதுகுப் பகுதியில் வலி ஏற்பட, மைதானத்தை விட்டு கிளம்பினார்.


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திரு.தி.சாந்தகுமார் அவர்களின் அன்புச் சகோதரன்

**தி.கஜேந்திரகுமார்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்**

(5744)

# கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமையும் பாடசாலை மண்டபத்தில் அதிபர். ந.ஜெயரூபன் தலைமையில் இரண்டு நாள் அமர்வுகளாக இடம்பெறும்.

முதலாம் நாள் அமர்வில் நூல் வெளியீடும் கௌரவிப்பும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், சிறப்புவிருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல் விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், தென்மராட்சிக்கல்விவலயஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் மற்றும் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தரும் அப்பாக்குட்டி நிதிய செயற்குழு உறுப்பினருமான வே.பொன்னம்பலம், கௌரவ விருந்தினர்களாக அப்பாக்குட்டி நிதிய செயற்குழு உறுப்பினர் செ.இராசையா, சாவகச்சேரி பிரதேச சபைஉறுப்பினர்சு.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மலர் வெளியீட்டு உரையை ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மத்திய கல்வி அமைச்சு முதுநிலை நிபுணத்துவ கல்வி ஆலோசகர் கலாநிதி எஸ். என். தணிகாசலம்பிள்ளை வழங்குவார்.

இரண்டாம் நாள் அமர்வில் பரிசில் வழங்கல் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய முகாமைத்துவப் பிர திக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்), து.ஜெயதேவன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலக புனர்வாழ்வு உத்தியோகத்தர் மு.கயோதரன், கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலயப் பரிபாலன சபைப் பொருளாளர் சி.செல்வநாயகம் ஆகியோரும் கலந்து கொள்வர்.(இ

# உணவு தவிர்ப்பில் ஈடுபடும்

# அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக இன்று இடம்பெறும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் இணைக

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமையில் (14.09.2018) இருந்து அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்ற அரசியல் கைதிகளை குறுகிய கால புனர்வாழ்வு வழங்கி விரைவில் விடுவிக்கவேண்டும் என்ற நியாயமான கோரிக்கைக்கு அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு ஏற்ப இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும், நாளை வவுனியாவிலும் இடம்பெறவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி முழுமையான ஆதர வினை வழங்குவதுடன், அனைவரையும் இக் கவனயீர்ப்பில் அணிதிரளுமாறும் கேட்டுக் கொள்கின்றது என அக்கட்சியின் வட பிராந்தியச் செயலாளரும், வலி. கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினருமான தோழர் கா. செல்வம் கதிர்காமநாதனால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்திக் குறிப்பில் தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக, இன்றுவரை தீர்வு வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற இவ் அரசியல் கைதிகள் தொடர்பான விடயத்தை, இன்றைய அரசாங்கம் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாது இருப்பவர்களை நிபந்தனை அற்ற வகையில் விடுதலை செய்வதன் மூலமும், தீர்ப்பு வழங்கப்பட்டவர்களைக் கடந்த கால உதாரணங்களை முன்மாதிரியாகக் கொண்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதன்மூலமோ தீர்த்துவைக்க முடியும்.

ஆனாலும், அரசியல் தீர்வையும், அரசியல் கைதிகளின் விடுதலையையும் தேர்தல் வாக்குறுதிகளாக முன்வைத்துப் பதவிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் பேரினவாதச் சிந்தனைக்குத் தீனி போடும் நோக்கில் மூன்று வருடங்கள் கடந்தும் இன்று வரை இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனையாமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)


### நல்லூர் பிரதேச சபை பகிரங்க அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் பழைய பொருட்கள் (இரும்பு, பிளாஸ்ரிக் போத்தல், பித்தளை) சேகரிப்போர், விற்பனை செய்வோர் சபையின் அனுமதிபெற்று வியாபார' நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் பகிரங்கமாக அறிவிக்கின்றேன். தவறின் பிரதேச சபை சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடுமென்பதை உரியவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(C-3883) தவிசாளர், நல்லூர் பிரதேசசபை.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



துர்க்கா மெடிக்கல் கிளினிக்கும் ஆய்வு கூடமும் திறப்பு

தோயக்கை தம்பனை வீதி புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள இந்த கிளினிக்குக்கு நோயாளிக்கு இரத்த மாதிரி சேகரிக்கக்கூடிய பெண்கள் வேலைக்கு தேவை. கீழ்க்காணும் TP: உடன் தொடர்பு கொள்ளவும்.

077 379 7111

(567)


## கண்ணீர்க் காணிக்கை



### திரு. பிரான்சிஸ் அன்ரனி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி **ம.நிர்மலஜோதி** அவர்களின் அன்புத் தந்தையார் **திரு. பிரான்சிஸ் அன்ரனி** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.**

(5738)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



### அமரர் திருமதி பொன்னம்மா நரேந்திரன்

கடந்த 22.08.2018 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி பொன்னம்மா நரேந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 21.09.2018 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

மடத்தடி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(C-3875) குடும்பத்தினர்.

## இராசி பலன்

**மீனம்:** ஆடம்பரப்பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உற்சாகமான நாள்.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** நட்பு பகையாகாதிருக்க விழிப்புணர்வு இவசியம், உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**கும்பம்:** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், பணப்பற்றாக்குறை ஏற்படலாம், ஒரு வேலையை முடிக்க சற்று அலையும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு, எண்ணியது நிறைவேறும் நாள், முன்னேற்றம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** மன அமைதி வேண்டி வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார நலன்கருதி புதியவர்களை சந்திக்க முனைவீர்கள், திடீர் பயணம் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், நன்மைகள் நாடிவரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

இராசி பலன் — கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை | | ராகு |
| செவ். சந். கேது | சந்திராஷ்டமம் புனர்பூசம், பூசம் | | |
| சனி | | குரு. சுக் | சூரி. புத |

**21.09.2018**
புரட்டாதி 05, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு
துவாதசி பின்னிரவு 4.28 மணிவரை
திருவோணம் மாலை 6.32 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
திருப்பதி தேர்
**வளவன்**

**தனுசு:** சுப செய்திகள் வந்து சேரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை கூடும்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**கன்னி:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# புதிய அரசியலமைப்பு வரும் ஆனால் வராது!



## முன்னாள் நீதிபதி விக்னராஜா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியல் அமைப்பு வரும் ஆனால் வராது என்ற நிலையில் உள்ளது எனத் தெரிவித்த முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா, தமிழ் மக்களின் ஆணையான தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு மாறாக மக்களை ஏமாற்றி கொண்டுவரப்படும் சட்டங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக வழங்கிய சட்ட விளக்கத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எழுத்து வடிவிலான அரசியல் அமைப்பு என்பது 18 ஆம் நூற்றாண்டுகளின் கடைசிப்பகுதியில் தான் உலக நாடுகளில் கொண்டு வரப்பட்டது. மக்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டு, அதனால் மக்கள் விரக்தி அடைந்து போராட்டம் இடம்பெற்ற பின்பு அதாவது எதிர்காலத்தில் அந்தநிலை வராமல் மக்களின் உரிமைகளை பேணி பாதுகாக்க எழுத்து மூல அரசியல் அமைப்பு வந்தது.

எமது அரசியல் அமைப்பில் பெயர் ஒவ்வொரு மொழியிலும் வித்தியாசப்படுகிறது. ஆனால் சட்ட பிரிவில் சிக்கல் ஏற்படும் இடத்து சிங்கள மொழியே மேன்மை பெறும். அதற்கு உதாரணமாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு ஒன்று அண்மையில் கொழும்பு நீதவான் நீதிமன்றில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல்செய்யப்பட்டது. ஆனால் அவர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ஒரு சட்டப் பிரச்சினையை எழுப்பி தடை உத்தரவை பெற்றுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தற்போது சிங்களம் ஆட்சி மொழியில் உள்ளது. ஏனைய மொழியில் பிரச்சினை இருந்தால் சிங்கள மொழியில் உள்ள விடயம் தான் மேன்மை பெறும். அதை வைத்து தான் மேற்குறித்த தடை உத்தரவைப் பெற்றுள்ளார்.

எனவே எமது புதிய அரசியல் அமைப்பில் சொல்லப்படும் ஏக்கிய இராச்சிய பதமே நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படும். சோல்பரி அரசியல் அமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு பகுதிக்கு பாதகமாகவும் ஒரு பகுதிக்கு சாதகமாகவும், ஒரு சட்டத்தையோ ஒரு பகுதிக்கு ந னாகவும் ஒருபகுதிக்கு நலன் இல்லாமலும் ஒரு சட்டத்தை பாராளுமன்றம் உருவாக்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளது,

இந்நிலையில் புதிய அரசியல்அமைப்பு வரும்ஆனால் வராது என்ற நிலையில் தான் உள்ளது. இலங்கை சரித்திரத்தில் 1972 ஆம் ஆண்டு ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசியல் அமைப்பை நிறைவேற்றியது.

1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு அரசியல் அமைப்பை கொண்டு வந்தது. தற்போது முக்கிய இருபிரதான கட்சிகளுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சரித்திரத்தில் முதற்தடவையாக இணைந்து புதிய அரசியல் அமைப்பை கொண்டு வரவிருக்கின்றனர். அந்த வகையில் அது சாத்தியமாகலாம் என எண்ண முடியும்

ஆனால் தற்போதுள்ள நடைமுறையில், கூட்டு எதிரணியினர் புதிய அரசியலமைப்புக்கு எதிர்ப்பு எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்கள். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சேர்ந்து அரசியல் அமைப்பு உருவாக்குவது என்றால் குடியரசு அரசியல், நிறைவேற்று ஜனாதிபதி அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும்.

ஆனால் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட தமிழ் பேசும் மக்களின் அடிப்படை விடயம் அரசியல் அமைப்பில் உட்புகுத்தப்படவேண்டும். ஆனால் அவர்களின் தேர்தல் வரையை ஒவ்வொரு கட்சிகளும் எதிர்த்துத்தான் கருத்து தெரிவித்துள்ளனர்.

பிரதானமாக வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்துள்ளார்கள். எனவே எவ்வாறு புதிய அரசியல் அமைப்பு சாத்தியமாகும்.

அரசியலமைப்பு என் பது சாதாரண சட்டம் நிறைவேற்றுவது போல் அல்ல. மாற்றம் வேண்டும் என்றால் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டும்.

அரசியல் அமைப்பில் சில பிரிவுகளுக்கு முரணாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்கு போகவேண்டிய தேவை உள்ளது. சர்வஜன வாக்கெடுப்புக்குப் போனால் என்ன நடக்கும்என்று அனைவருக்கும் தெரியும்.

புதிய அரசியல் அமைப்பை அமுலுக்குக் கொண்டு வந்தாலும் சோல்பரி அரசியல் படித்த பாடத்தின் அடிப்படையில்அந்த அரசியல்அமைப்பை மாற்றவோ, திரும்பப் பெற முடியாத போன்ற அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும். சட்டப்படி பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

நிலையான அரசியல் அமைப்பு வேண்டுமாக இருந்தால் அது பிராந்தியங்களின் ஒன்றியம் என்று மாத்திரம் போடப்படுவதில்லை. வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் வாழும் மக்கள், முதலில் வடக்கு-கிழக்கு சட்டசபை இரண்டில் மூன்று அரசியல் அமைப்பு விடயத்தை மாற்றுவதற்கு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

அதுமட்டுமல்ல ஏனைய மாகாணங்களின் சர்வஜன வாக்கெடுப்புவேறாகவும் வடக்கு-கிழக்கு மாகாண மக்களிடம் வாக்கெடுப்பு தனியாகவும் எடுக்கப்பட வேண்டும். வடக்கு- கிழக்கு மக்களின் சர்வஜன வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் மக்கள் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே அரசியல் அமைப்பை மாற்ற முடியும் என்ற நிலைப்பாடு சட்டத்தில் இருக்க வேண்டும். ஆனால் புதிய அரசியல் அமைப்பில்அவ்வாறு இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பை நான் நிராகரிக்கவில்லை. ஆனால் சட்ட அறிவு தெரிந்தவன் என்ற அடிப்படையில் வரப்போதும் அரசியல் அமைப்பில் பிராந்தியங்களின் ஒன்றியம்வர வேண்டும். ஆனால் அவை எதுவும் இல்லை.

அது தொடர்பில் யாரும் பேசவும் இல்லை. ஆனால் இது தொடர்பாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் த.தே.கூ. தேர்தல் விஞ்ஞாபனம், மாகாணசபை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயத்தை மேற்கோள்காட்டி வலியுறுத்தி பேசி வருகிறார்.

ஆனால் அவரை வலிந்து கொண்டு வந்து முதலமைச்சராக்கிய அவருடைய கட்சியினரே அவரை விமர்சிப்பது வேதனைக்குரியது. அவர்கள் விமர்சிப்பதால் தான் அவர்கள் மேல் சந்தேகம் எழுகிறது. அவர் அவர்களின் கட்சிக்கு எதிராகச் செயற்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை தான் வலியுறுத்தி சொல்கிறார்.

அவர் கட்சி நிலைப்பாட்டுக்கு கட்டுப்பட வேண்டும் என்றால் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளவற்றுக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுக்க முடியாது. அதை யாரும் எற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் மக்களின் ஆணை. அதன்படிதான் நாம் செயற்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுயமாக உருவாகியது அல்ல. மேடைப் பேச்சுக்களில் அரசியல் ரீதியாக எதையும் சொல்ல முடியும். ஆனால் சட்டரீதியாக சரியாக பேச வேண்டும்.

உதாரணமாக யாழ். மாநகரசபை உறுப்பினர் மணிவண்ணனுக்கு எதிரான வழக்கை யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்யலாம் ஆனால். கொழும்பில் தாக்கல் செய்தார்கள். அதிகாரப் பகிர்வு வேண்டும் என்கிறார்கள். அதை விட்டுவிட்டு மத்தியை வலுப்படுத்த மத்தியிடம் செல்கிறார்கள்.

எனவே புதிதாக அரசியல் அமைப்பைக் கொண்டுவர முதல் எமக்கென இருப்பதை செயற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# "புதிய சீருடையை ஏற்பதில்லை" குடும்பநல உத்தியோகத்தர்கள் எதிர்ப்பு

## போராட்டம் நடத்தவும் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

குடும்ப நல உத்தியோகத்தர்களுக்காக அறிமுகப் படுத்தப்பட்ட புதிய சீருடை தொடர்பான கலந்துரையாடல் கடந்த 16 ஆம் திகதி கைதடி விநாயகர் கல்யாண மண்டபத்தில்வடக்கு மாகாண அரசாங்க குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவி.ப.சசிகலா தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு "புதிய சீருடையை ஏற்பதில்லை" என்ற கோஷத்திற்கு வலுச் சேர்க்கின்ற வகையில் சுகாதாரத் திணைக்கள பொது குடும்ப சுகாதார சேவை சங்கம் (நுகேகொடை) தனது ஆதரவைத் தெரிவிக்குமுகமாக அச் சங்கத்தின் நிர்வாகச் செயலர் ஆச்சாரிய பந்து ஜயசிங்க உட்பட ஆறு பேர் கலந்துகொண்டு புதிய சீருடையை ஏற்பதில்லை என்ற விடயம் பற்றிக் கலந்துரையாடினர்.

அத்துடன் பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளரின் 11.09.2018 திகதியிடப்பட்ட, புதிய சீருடையை உடனடியாக நடைமுறைப் படுத்தும்படி அனுப்பிய கடிதம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதன் பிரகாரம் மேற்படி இணையில் உள்ளவர்கள் உடனடியாக அமைச்சரையோ அல்லது அது தொடர்பான அமைச்சின் அதிகாரிகளையோ சந்திக்கவிருக்கின்றனர்.

இது தொடர்பாக அனைத்துச் சங்க உறுப்பினர்களையும் கலந்தாலோசிக்காமல் ஒரு சிலரால் மட்டும் தன்னிச்சையாக எடுக்கப்பட்டு, திணிக்கப்பட்ட நடைமுறைப் படுத்த, அறிவுறுத்துவதற்கெதிராகப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டது. (இ-7)




இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய சர்வதேச தரப் பட்டப்படிப்புக்களை (BEng [Hons] in Software Engineering, BA [Hons] in Business Administration) ESOFTMETRO CAMPUS யாழ்.வளாகத்தில் விசேடமாக மாணவர்களுக்கு வழங்கும் வகையில் புதிய அலுவலகம் கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை ESOFT நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி டயன் ராஜபக்ஷவால் திறக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 2018ஆம்ஆண்டிற்கான சர்வதேச தரச் சான்றிதழ் (PEARSON - UK) வழங்கும் இலங்கையின் முதற்தர கல்வி வழங்குநர் விருதினைபெற்றமைக்கான மகிழ்ச்சியினை ESOFT நிறுவனத்தின் தலைமை அதிகாரிகளுடன் யாழ்.கிளையின் முகாமையாளர் பாலசுப்ரமணியம் கஜானன் மற்றும் ஊழியர்கள் விருதின் படம் பொருந்திய கேக் ஒன்றினை வெட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

# இலங்கை பொலிஸ் சேவையில் பதவி உயர்வுகளில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதா?

## நாடாளுமன்றில் டக்ளஸ் கேள்வி

(கொழும்பு)

இலங்கை பொலிஸ்சேவையானது கடந்த 03 ஆம் திகதி தனது 152ஆவது வருடத்தினைப் பூர்த்தி செய்துள்ளது.

இந்த நிலையில், இலங்கை பொலிஸ் சேவையில் பெண் பரிசோதகர்கள் பதவி உயர்வுகளிலிருந்து தடுக்கப்பட்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

1997 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸ் சேவையில் 120 பெண்கள் உதவி பரிசோதகர்களாகப் பதவியில் இணைந்துகொண்டனர் என்றும், இவர்களில் சிலர் 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சிரேஷ்ட பரிசோதகர்களாக பதவி உயர்த்தப்பட்டனர் என்றும், ஏனையோர் அனைவரும் பதவி உயர்த்தப்படவில்லை என்றும், சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் நிலைக்கான பெண்கள் தரப்பு வெற்றிடங்கள் இன்மையே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலைமை காரணமாக இலங்கை பொலிஸ் சேவையில்இணைந்து கொள்கின்ற பெண்கள், உதவி பொலிஸ்மாஅதிபராகவோ, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகவோ, பொலிஸ்மா அதிபராகவோ வர இயலாத சூழ்நிலை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலையில் அரசியலில் பெண்களுக்கு 25 வீதமான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு முன்வந்துள்ள நாட்டில்,பொலிஸ் சேவையில் பெண்கள் தொடர்பில் காணக்கூடியதான மேற்படி நிலைப்பாடானது, பெண்களின் உரிமையினை மறுதலிப்பதாகவே உள்ளதாகத் தெரிய வருகின்றது.



இந்நிலையில் இலங்கை பொலிஸ் சேவையில் இதுவரையில் பதவி உயர்வு பெற்றுள்ள பெண் பரிசோதகர்கள் எத்தனைபேர்? உயர்த்தப்பட்ட பதவி நிலைகள் என்ன? இலங்கை பொலிஸ் சேவையில் பதவி உயர்வு பெறக்கூடிய நிலையில் தற்போதைய நிலையில் எத்தனை பெண்பரிசோதகர்கள் சேவையில் இருக்கின்றனர்?

மேற்படி பெண் பரிசோதகர்களுக்கான பதவி உயர் விற்கான வெற்றிடங்கள்இல்லை எனக் கூறப்படு கின்ற நிலையில், வெற்றி டங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மேற்படி பெண் பரிசோதகர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட இயலும் எனில், எப்போது அதனை வழங்க முடியும் என்பதை அறியத் தர முடியுமா?

மேற்படி விடயம் தொடர்பில் பதில்களையும் எடுக்கப் படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா அரச நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டம், ஒழுங்கு விவகார அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் கோரிக்கைவிடுத்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)


மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி

ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
சமாதித்திருக்கோவில்



மண்டலாபிஷேகப் பூர்த்தி

மெய்யன்பர்களே!

நிகழும் விளம்பி வருடம் புரட்டாதி 7ம் நாள் (23.09.2018) ஞாயிற்றுக்கிழமை சித்தயோகமும் சதய நட்சத்திரமும் கூடிய வேளையில் சமாதித்திருக்கோவிலில் எழுந்தருளிய அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் காலை 10 மணியளவில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. இந் நிகழ்வில் யாபேரும் பங்குபற்றி குருவருளையும் திருவருளையும் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க
அன்பே சிவம்
சற்குருநாதன் பணியில்
அறங்காவலர்
நிர்வாக உறுப்பினர்கள்

(C-3880)


# மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு தற்காலிக வகுப்பறைகள் அமைக்க அடிக்கல்





(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு தற்காலிக வகுப்பறைகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

RAHAMA தொண்டு நிறுவனத்தின் 1.3 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 100 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டதாக வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் நோர்வே நாட்டின் பிரதிநிதிகள் RAHAMA நிறுவன பிரதிநிதிகள்,வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர்,தெல்லிப்பழை பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,உதவி பிரதேச செயலர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், கல்லூரி சமூகத்தினர்,பழைய மாண வர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (இ-9)


ஸ்ரீராம ஜெயம்



இணுவில் திருப்பதி
அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018
13.09.2018 முதல் 22.09.2018 வரை

21.09.2018 இன்று வெள்ளிக்கிழமை
ஒன்பதாம் நாள் மகாவிஷ்ணு திருக்கோலம்
தீர்த்தோற்சவம் (மாலை 6.00 மணி)

**இசை அர்ப்பணம்:**

பாட்டு- தவநாதன் றொபேட்
வயலின்- திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம்- திரு.க.கஜன்
கெஞ்சிரா- திரு.நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங்- திரு.சி.செந்தூரன்

021 224 2300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்


### கண்ணாடி வழங்கல்

(கரணவாய்)

கரணவாய் பிரதேச செய லக சமூக சேவைப்பிரிவில் கண்ணாடிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு மருந்துவஅறிக்கையைப் பெற்றுக் கொடுத்த கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின்அனுசர ணையுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் வைத்து பிற்பகல் 2.30 மணிக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளது.

இதில் கரவெட்டி பிரதேசசெயலர்இதயாரூபன் கலந்து கொள்வார். (இ-60)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:51<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/456 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 64செவ் 7 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/1293 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 3<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:O/L/லண்டன்<br>தொ.இ: B/457 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 25செவ் 4 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1298 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 15<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/460 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 17 செவ் 1 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/1232 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 20<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4725 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 49சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BCA/வங்கி உதவி முகாமையாளர்<br>தொ.இ: G/1309 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



இணுவில் திருப்பதி
அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்
சனீஸ்வரர் பரிகார சந்நிதி, மருதனார்மடம்

**புரட்டாதி சனி உற்சவமும் சனீஸ்வர தோச பரிகார ஹோமமும்- 2018**

22.09.2018- காலை 8.00 மணிமுதல் - 11.30 மணிவரை
29.09.2018 காலை 8.00 மணிமுதல் - 11.30 மணிவரை
06.10.2018 காலை 8.00 மணிமுதல் - 11.30 மணிவரை
13.10.2018 காலை 8.00 மணிமுதல் - 11.30 மணிவரை

கோவிந்தர் அடியார்களே!

யாழ்ப்பாண புனித பூமியில் தனிப் பெரும் சந்நிதியாகவும் அருகே நளபுஷ்கரணி என் னும் புனித தீர்த்தம் கொண்டு சனீஸ்வர பகவான் அருள்பாலித்த வண்ணம் உள்ளார். இவ் வருடம் அடியார்க ளின் நலன்கருதி மகாபரிகார யாகம் பிரதிப் புரட்டாதி சனி தோறும் நடை பெற இருப்பதால் அடியார்கள் எல்லோரும் அன்று முழுவதும் ஆலயத்திற்கு வந்து நளபுஷ் கரணியில் நீராடி எள் தீபம் ஏற்றி சனீஸ் வர பகவானை வழிபாடு செய்து அவரின் எஜமான ராகிய மகாவிஷ்ணுவையும் தரிசித்து உங்களின் தோஷங்களை நிவர்த்தி செய்து எம்பெருமா னின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கிறோம்.

021 224 2300 (சி-3884)

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்.

# புதிய விவசாயக்கிணறுகளை அமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் 103 மில். ரூபா நிதி தேவை

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 259 புதிய விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கும் 202 வரையான விவசாயக்கிணறுகளை புனரமைப்பதற்கும் 103 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுகின் றன.

குறிப்பாக புதிய விவசாயக்கிணறுகள், கைவிடப்பட்ட மற்றும் சேதமடைந்த விவசாயக் கிணறுகளை புனரமைக்கவேண்டியதேவையும் காணப்படுகின்றன. இது தொடர்பில் விவசாயிகளால் புதிய கிணறுகளை அமைத்து தருமாறும் அதேபோன்று சேதமடைந்த கிணறுகளை புனரமைத்து தருமாறும் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்டத்தில் 259 வரையான விவசாயக் கிணறுகளின் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

இதற்கான மதிப்பீடாக 77 மில்லியன் ரூபா தேவைப் படுகின்றது.

இதேபோன்று 202 வரையான விவசாயக் கிணறுகளை புனரமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றன.

இதற்காக 26 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிய விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கும் சேதமடைந்த, கைவிடப்பட்ட கிணறுகளை புனரமைப்பதற்கும் 103 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# சட்டவிரோத மணல் அகழ்வு; தண்டப்பணம் அறவீடு

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் சேமமடுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் பொலிஸாரின் நடவடிக்கைகளை அடுத்து கைப்பற்றப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டபோது உழவு இயந்திரச் சாரதிக்கு 50ஆயிரம் ரூபா நீதிமன்றத்தினால் தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

போகஸ்வெவ பகுதியிலிருந்து சேமமடு படிவம் 2 இற்கு சட்டவிரோதமான முறையில் எவ்வித ஆவணங்களும் இன்றி உழவு இயந்திரத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மணல் ஓமந்தைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு உழவு இயந்திரத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது சட்டவிரோதமான முறையில் எடுத்துச்செல்லப்பட்ட மணலுக்கு நீதிமன்றத்தினால் 50ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)



# பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



(மல்லாவி )

யாழ்ப்பாணம் வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலுடனும் யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கும் மற்றும் பெற்றோர்களை இழந்த நிலையிலும், தந்தையரை இழந்த நிலையிலும் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் 5 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி. ஜானகி விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வு அண்மையில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரினாலும் மற்றும் ஏனைய வழிகளாலும் உழைப்பாளிகளான பிள்ளைகளை இழந்த நிலையில் உறவினர்களாலும் கைவிடப்பட்ட நிலையிலும் சிறுநீரகங்கள் உட்பட பல்வேறு நோய்த்தாக்கங்களுடன் தனிமையில் ஒலுமடு, மாங்குளம், கல்குவாரி, கிழவன் குளம், பனிக்கன் குளம், வன்னிவிளான்குளம், அம்பாள்புரம் உட்பட பல கிராமங்களில் ஒரு வேளை உணவுக்காக அல்லற்படும் 65 வயது தொடக்கம் 107 வயதுக்குட்பட்ட 45, முதியவர்களை இனம் கண்டு அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி உதவுமாறு யாழ்ப்பாணம் வட்டு.இந்து வாலிபர் சங்கத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன் போது, 45 முதியவர்களுக்கு இரண்டு தடவைகள் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், யுத்த சூழ்நிலைகளால் தங்கள் பெற்றோர்களை இழந்த நிலையிலும் மற்றும் தந்தையரை இழந்த நிலையிலும் பல மைல் தூரத்தில் இருந்து நடந்து வந்து பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவர்கள் 4, பேருக் கும் மாங்குளம் மாவடி சித்தி விநாயகர் ஆலயத்திற்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் அறநெறிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் அறநெறியை கற்பிக்கும் ஆசிரியர்களின் பயன்பாட்டுக்காகவும் ஒரு துவிச்சக்கர வண்டியுமாக மொத்தம் 5 துவிச்சக்கர வண்டிகள் தலா 17 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியில் மொத்தம் 87 ஆயிரத்து 500 ரூபாவில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக 5 இலட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# மண்டலாபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள மகாதேவ ஆச்சிரமத்தில் ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் சமாதித்திருக்கோவில் மண்டலாபிஷேகப்பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் 108 சங்காபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமாதித் திருக்கோவிலில் எழுந்தருளிய அம்பாளுக்கு நடைபெறும்.

ஆதலால் அடியார் அனைவரையும் கலந்து கொண்டு திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறங்காவலர் நிர்வாக உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். (2)

# பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொழில் வருமானம் இன்றி அவதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் பகுதியில் சுமார் 114 வரையான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்வாதார வசதிகள் இன்றியும் வருமானங்கள் இன்றியும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வாழ்வதாக மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தேவிபுர் அ. பகுதியில் 683 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதில் 114 வரையான குடும்பங்கள் பெண்தலைமைத்துவ குடும்பங் களாகவே வாழ்ந்து வருகின்றன என்று தெரிவித்த நிர்வாகம் மேற்படி குடும்பங்கள் யுத்தத்தின் போது கணவன்மாரை இழந்து காணாமல் போன குடும்பங்களாகவும் கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்களுமே அதிகளவில் காணப்படுகின்றன.

இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் 90வீதமான குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் வருமானங்கள் இன்றியும் அன்றாடம் சொல்லொணாத்துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றன.

தற்போதைய வரட்சியும் அவர்களது தொழில் வாய்ப்புக்கள் அற்றமைக்கான காரணமாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்ட நிர்வாகம் தற்போது இந்த பிரதேசத்தில மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி கஞ்சாப் பயன்பாடுகள் என்பவற்றால் இவ்வாறான குடும்பங்களும் பாதுகாப்பற்ற ஒரு சூழலில் வாழும் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை எமது பகுதியில் ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய வகுப்புத்திட்ட காணிகளில் குடியேறி நீண்ட காலமாக வாழ்ந்து வரும் 142 வரையான குடும்பங்கள் இதுவரை வீட்டுத்திட்டமோ அல்லது ஏனைய அடிப்படை உதவிகளையோ பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் கடந்த எட்டு ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வை முன்னேற்ற அனைத்து சமூகமும் முன்வரவேண்டும் எனவும் மேற்படி நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

# மாணவர்களின் குடிநீர் தேவையை பொலிஸார் தீர்த்து வைத்தனர்



(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை மாணிக்க இலுப்பைக்குளம் அ.த.க பாடசாலைக்கு மாணவர்களின் குடிநீர் தேவை ஓமந்தை பொலிஸாரினால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை மாணிக்க இலுப்பைக்குளம் அ.த.க. பாடசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த குடிநீர்ப்பிரச்சினைக்கு நேற்று முன்தினம் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்ற குறித்த பாடசாலையிலுள்ள குழாய் கிணற்றில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியினால் குடிநீர் வற்றிய நிலையில் காணப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கு குடிநீர்ப்பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது.

இவ் விடயம் ஓமந்தை பொலிஸாரின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. இதையடுத்து வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோனினால் நேற்று முன்தினம் பாடசாலைக்கு குடிநீர் வழங்கி மாணவர்களின் நீண்டகால தேவை நிறைவேற்றப்பட்டுள்ளது. (2-281)

# குடும்பப் பெண்ணின் தங்கச்சங்கிலி அறுப்பு

(கிளிநொச்சி)

துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த இளம் குடும்பப் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப குடும்பப் பெண் வைத்தியசாலை சென்று துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது, உருத்திரபுரம் வீதியின் நடுப்பகுதியில் அமைந்துள்ள நீர்வடிந்தோடும் கோஸ்வே ஏற்றத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் பின்புறமாக வந்த இளைஞர்களினால் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-254)

# கரைச்சி பிரதேச சபையின் விசேட அமர்வு; பாதீட்டு ஒதுக்கீடு குறித்து ஆராயப்படும்

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் விசேட அமர்வு ஒன்று இன்றைய தினம் நடைபெறவுள்ளதாக தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் இரண்டு மணி முதல் ஐந்து மணி வரை கரைச்சி பிரதேச சபையின் விசேட அமர்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது கிளிநொச்சி சேவைச் சந்தையின் புதிய கட்டடம் தொடர்பாகவும், கரைச்சி பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடு பற்றியும் ஆராய்வதற்காக கரைச்சி பிரதேச சபையின் 13 உறுப்பினர்கள் ஒப்பம் இட்டு விசேட அமர்வை கூட்டுமாறு கோரியிருந்தமைக்கு அமைவாக இன்று விசேட அமர்வு இடம் பெறுகின்றது.

இந்த விசேட அமர்வில் கலந்து கொள்வதற்கே ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பாதீட்டு விவாதங்களுக்கு ஊடகவியலாளர் அனுமதிக்கப்படுவார் எனவும் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இனி வரும் காலங்களில் சபையின் மாதாந்த கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள ஊடகவியலாளர்கள் தங்களது ஊடக அடையாள அட்டையின் நிழல் பிரதியொன்றை முன் கூட்டியே வழங்கி அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் தவிசாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# 6 கிலோ கேரளக் கஞ்சாவுடன் வவுனியாவில் இளைஞன் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் 6 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி கேரளக் கஞ்சாவை கொண்டு சென்ற நபரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 11.20 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் தெரியவருவதாவது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பணித்த பேருந்தை நொச்சி மோட்டை பகுதியில் வழிமறித்து பொலிஸார் சோதனை மேற்கொண்ட போது அப்பேருந்தில் பயணித்த கொழும்பை சேர்ந்த சத்தியவேல் சஞ்சீவன் (வயது-19) என்ற இளைஞன் 6 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

# உணவு தவிர்ப்பிலுள்ள கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்

## மன்னார் பிரஜைகள் குழு வலியுறுத்து



(மன்னார்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்ந்தும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் பிரஜைகள் குழுவின் செயற்றிட்ட நிகழ்வு காரணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளை சந்தித்தோம்.

தமது விடுதலையை முன்வைத்து அவர்கள் தொடர்ந்தும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் சென்றபோது அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து எங்களை வந்து சந்தித்தார்கள்.




அவர்களுடைய உடல் நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றதை நாங்கள் அவதானித்தோம். சக்தியை இழந்து மிகவும் வேதனைக்குள்ளானவர்களாக அவர்கள் காணப்பட்டனர்.

தமது விடுதலைக்கு முன்நின்று உழைக்குமாறும் எங்களிடத்தில் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தாங்கள் சுமார் 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் உள்ளதாகவும், தற்போது பல்வேறு அரசியல் பிரமுகர்கள் தங்களை வந்து சந்தித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

தாங்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை காலமும் தமக்கு எவ்வித விமோசனமும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுகவீனம் அடைந்துள்ள போதும் அவர்களுக்கு கை விலங்கிடப்பட்டே வைத்திய சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அதனை அவர்கள் துயரத்துடன் எங்களிடத்தில் தெரிவித்துள்ளனர்.

தங்களை விடுதலை செய்யாது விட்டாலும், தங்களை புனர்வாழ்வுக்காவது அனுப்பும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். 12 அரசியல் கைதிகள் அங்கே இருக்கின்றார்கள். அவர்களில் 3 பேர் மிகவும் சுகவீனமடைந்து உள்ளனர்.

அவர்களுக்கான நடவடிக்கைகள் எவையும் நீதிமன்றத்தின் ஊடாகவும் எடுக்கப்படவில்லை. சுமார் 102 நாட்களுக்கு அவர்களின் விசாரணைகளை தள்ளி வைத்துள்ளார்கள்.

அவர்களின் விடுதலைக்காக போராடுவதற்காகவே அல்லது கேட்பதற்காகவே யாரும் இல்லை என்ற ஆதங்கம் அவர்களிடத்தில் இருக்கின்றது.

இவர்களின் விடுதலைக்காக அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என அனைவரிடமும் மன்னார் பிரஜைகள் குழுவின் சார்பாக விநயமாக கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பாக அரசியல் பிரமுகர்களை அணுகி அரசியல் கைதிகளின் விடுதலைக்காக இந்த நாட்டின் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

இவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி புனர்வாழ்வு வழங்க வேண்டும் என அரசினையும் அதனைச் சார்ந்துள்ளோரிடமும் நாங்கள் காத்திரமாக கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# எரிபொருள் செலவு, வாகனத் திருத்தத்திற்காக மக்களிடம் குடிநீருக்குப் பணம் அறவீடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக அனைத்துப் பகுதி மக்களும் குடிநீர் பிரச்சினையால் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த நிலையில் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் நீரை பெற்றுக்கொள்வதற்கு சிரமப்படும் நிலையில் அப்பகுதி மக்களுக்கு முசலி பிரதேச சபையினால் நீர் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் முசலி பிரதேச சபையினால் வழங்கப்படும் குடிநீருக்கு முசலி பிரதேச சபை பணம் அறவிடுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயிரம் லீற்றர் தாங்கியில் நீர் நிரப்புவதற்கு 300 ரூபாவும் 500 லீற்றருக்கு 150 ரூபாவும் 200 லீற்றருக்கு 80 ரூபாவும் வாளி குடங்களுக்கு 30 ரூபாவுக்கும் மேல் அறவிடப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப் பிரச்சினை தொடர்பாக முசலி பிரதேச சபையின் தலைவர் எம்.சுபிஹானை வினவிய போது.

முசலி பிரதேச சபைக்கு என வருமானங்கள் இல்லை. எரிபொருள் செலவு மற்றும் வாகன திருத்த வேலைகளுக்காக இவ்வாறு குடிநீருக்கு மக்களிடம் பணம் அறவிடப்படுகின்றது.

பிரதேச சபையின் வருமானத்திற்காக மக்கள் மீது சுமையை ஏற்றக் கூடாது.

பிரதேசங்களில் குடிநீர் பிரச்சினை உள்ள இடங்களை தேசிய நீர் வழங்கல் சபையிடம் அடையாளப்படுத்தினால் அவர்கள் மக்களுக்கு இலவசமாகவே நீர் விநியோகம் செய்து கொடுப்பார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# வவுனியா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு முதலுதவிப்பெட்டிகள்





(பனிக்கன்குளம்)

வவுனியா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு முதலுதவி சிகிச்சை பெட்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 21 பாடசாலைகளுக்கு இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் அனுசரணையில் முதலுதவி சிகிச்சைப் பெட்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஓமந்தை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன் கலந்து கொண்டு வவுனியா ஓமந்தை பிரிவிலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கு முதலுதவி சிகிச்சை பெட்டிகளை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான பிஷப் பி. எம். இராஜசிங்கம், கனகராஜன்குளம், புளியங்குளம் உதவிப் பொலிஸ் அதிகாரி டபிள்யூ. கே. பொன்சேகா, ஓமந்தை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் கோகிலகுமார் அஞ்சலா, பொலிஸ் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# கமநல சேவை நிலையங்களிலுள்ள 24 உழவு இயந்திரங்கள் மட்டுமே இயங்கும் நிலையில்

## கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்பினர் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய அரசினால் வழங்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களில் 24 வரையான இயந்திரங்களே இயங்கக்கூடிய நிலையில் உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளின் தேவை கருதி இந்திய அரசின் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களில் தற்போது 100 வரையான உழவு இயந்திரங்கள் கமநல சேவை நிலையங்களில் உள்ளன. அவற்றில் 24 வரையான உழவு இயந்திரங்கள் மட்டுமே இயங்கு நிலையில் உள்ளன.

37 வரையான உழவு இயந்திரங்கள் சிறுதிருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன.

கமநலசேவை நிலையங்களில் உள்ள இந்த உழவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முன் வருவதில்லை என மாவட்ட கமநலஅபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஆயிரத்து 376 வரையான உழவு இயந்திரங்கள் தனியாரிடம் உள்ளன என்றும் இதனையே விவசாயிகள் பயன்படுத்துவதனால் கமநலசேவை நிலைய உழவு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முன்வருவதில்லை என்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளின் தேவைகளுக்கென இந்திய அரசினால் வழங்கப்பட்ட மேற்படி உழவு இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள், உழவு இயந்திர இழுவைப்பெட்டி மற்றும் இரண்டு சுழல் கலப்பைகள் உள்ளிட்ட பெறுமதியான உபகரணங்கள் களவாடப்பட்டமை தொடர்பில் இது வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை மற்றும் அது தொடர்பான விசாரணைகள் தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்றும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-315)

# கசிப்புடன் கைதான நபருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை பாலமோட்டைப்பகுதியில் நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்திய போது எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் பாலமோட்டையில் நடவடிக்கை மேற்கொண்ட ஓமந்தைப் பொலிஸார் சட்டவிரோத கசிப்பு அரை லீற்றரை தனது உடைமையில் வைத்திருந்த குற்றத் திற்காக அப்பகுதியைச் சேர்ந்த 38வயதுடைய நபர் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். நீண்டகாலமாக சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதையடுத்து மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை கைப்பற்றப்பட்ட கசிப்புடன் நேற்று முன்தினம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-281)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2018 - 17.10.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனிபகவான் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி மீது குரு பார்வை இருக்கிறது. மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும். இலாபச் சனியாலும் பொருளாதார நிலை உயரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். திறமை பளிச்சிடும் நேரமிது. தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஒரு சில சமயங்களில் செலவீனங்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும். இருப்பினும் சாதுர்யமான பேச்சாலும், சமயோசிதமாக நடந்து கொள்வதன் மூலமும் அதைச் சமாளித்து விடுவீர்கள்.

4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 12ஆம் இடத்தில் உச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு கேதுவும் இணைந்திருக்கிறார். எனவே ஆன்மீகச் செலவுகள் அதிகரிக்கும். சொத்துகள் வாங்க, விற்க எடுத்த முயற்சி தடைப்பட்டிருக்கலாம். இப்போது அது சுலபமாக முடியும். விரும்பிய சொத்துகளை வாங்குவதற்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகிச் செல்வர். தர்ம சிந்தனை அதிகரிக்கும். தாராள மனப்பான்மை உருவாகும். உடன்பிறப்புகளின் இல்ல திருமண விழாக்களை முன்னின்று நடத்திவைக்க உறுதுணையாக இருப்பீர்கள்.

மாபெரும் கிரகமான குருபகவான் ஒக்டோபரில் பெயர்ச்சியாகப் போகிறார். 10 இல் குரு வருகின்றபொழுது பலவிதமான மாற்றங்களை உங்களுக்கு வழங்குவார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான், கேந்திர ஸ்தானத்தில் வரும்பொழுது, இராகுபகவான் 6இல் சஞ்சரிப்பதால் ஒரு மிகப்பெரிய நன்மை கிடைக்கப் போகின்றது. 6இல் இராகு நின்று குரு கேந்திரத்தில் இருந்தால் 'அஷ்டலட்சுமி யோகம்' என்ற ஒரு அற்புதமான யோகம் ஏற்படும். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்மாதமாக இந்த மாதத்தைக் கருதலாம்.

இந்த நேரத்தில் குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே யோகபலம் பெற்ற நாளில் திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வருவதுடன், குரு பீடங்களுக்கும் செல்லலாம். நவராத்திரி நாயகியை வழிபடுவது நல்லது.

துலாம் இராசியில் புதன்

மாதத் தொடக்கத்தில் கன்னி இராசியில் உச்சம் பெற்றிருக்கும் புதன், ஒக்டோபர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குள் அடியெடுத்து வைக்கிறார். அதே நேரத்தில் கொஞ்சம் வலிமையிழந்தும் இருக்கின்றார். ஒக்டோபர் 4 ஆம் திகதி புதன் பலம்பெறுகிறார். பலம்பெற்ற புதன் சுக்கிரனோடு இணைந்து புதன்-சுக்கிர யோகத்தை உருவாக்குவதால், இக்காலம் ஒரு இனிய காலமாகும். தக்க விதத்தில் தொழில் நடைபெறும். தடைகள் அகலும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். நகை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். தாயின் உடன்பிறப்புகளோடும், சகோதர வர்க்கத்தினரோடும் இருந்த பிரச்சினைகள் தானாக விலகும்.

குருப்பெயர்ச்சி காலம்

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், ஒக்டோபர் 4 ஆம் திகதி 10ஆம் இடத்திற்கு செல்கிறார். இந்த




குரு மாற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மற்றவர்களுக்கெல்லாம் 10இல் குரு வந்தால் பதவி மாற்றம் என்பது வழக்கம். அது பொது நியதி என்றாலும் உங்களைப் பொறுத்தவரை தனலாபதிபதி 10இற்கு வரும்பொழுது தன வரவு அதிகரிக்கும். பதவி உயர்வு கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம். தொழில் புரிபவர்களுக்கு கிளை தொடங்கும் வாய்ப்பு உருவாகும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்புக் கிட்டும்.

### நிம்மதி கிடைக்கும் நேரமிது

சுக்கிரனின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்தக்தில் சுக்கிரன் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் பலம்பெற்று சஞ்சரிக்கிறார். அவர் ஒக்டோபர் 11 ஆம் திகதி வக்கிரம் பெறுகின்றார். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் தொல்லைகளும், பிரச்சினைகளும் உருவாகலாம். வாரிசுகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பூர்வீகச் சொத்துகளில் பிரச்சினைகள் தலைதூக்கும். பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரியம் கொஞ்சம் குறையலாம். விரயங்கள் அதிகரிக்கின்றதே என்று கவலைப்படுவீர்கள். விலையுர்ந்த பொருட்களை வாங்கும் பொழுது கவனம் தேவை. ஒரு சிலருக்கு ஏமாற்றங்கள் வந்து சேரும். எந்த மாற்றமும் உங்களுக்கு நல்ல மாற்றமாக அமைய திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதத் தொடக்கத்தில் தனவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். தனித்து இயங்க வாய்ப்புகள் கைகூடி வரும். உடன் பிறப்புகளுடன் இருந்த பிணக்குகள் மாறும். ஊர் மாற்றச் சிந்தனை அதிகரிக்கும். கடன் சுமையில் பாதிக்கு மேல் திருப்பிச் செலுத்துவீர்கள். கணவன்-மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் தாய்வழி ஆதரவும், சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பணி உயர்வும், எதிர்பார்த்த மாற்றங்களும் கேட்காமலேயே கிடைக்கலாம். சக பணியாளர்களால் உங்களுக்கு ஏற்படும் சங்கடங்கள் அகலும். அதிகாரிகளின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும். வராத சம்பளப் பாக்கிகள் வந்து மகிழ்ச்சியைத் தரும். சனி பார்வை இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை வரும்பொழுது, உடனுக்குடன் மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது. குலதெய்வவழிபாடும், நவராத்திரி நாட்களில் துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி வழிபாடும் நன்மையைத்தரும்.



விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் இணைந்திருக்கிறார். குருவின் பார்வை 2, 12 ஆகிய இடங்களில் பதிவதால் வரவும், செலவும் சமமாக இருக்கும். ஒரு சில காரியங்களில் போராட்டத்தின் முடிவிலேயே வெற்றி கிடைக்கும். பிரச்சினைகள் அதிகரிப்பதால், வீடு மாறலாமா என்ற சிந்தனை உருவாகும். பஞ்சம ஸ்தானத்தில் ராகு இருப்பதால் பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான். சப்தம ஸ்தானத்தில் புதன் உச்சம் பெற்றுச் சூரியனுடன் இணைந்திருப்பதால் புத ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெற்று இலாப ஸ்தானத்தில் இருப்பதால், வரவு திருப்திகரமாகவே இருக்கும். வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். பணியிடத்தில் உங்களது நேர்மையைப் பாராட்டி சில முக்கியப் பொறுப்புகளைக் கொடுக்கலாம். 10இல் சனி இருப்பதால் தொழில் புரிபவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பழைய பங்குதாரர்கள் விலக நேரிடலாம். அவர்களின் கணக்கு வழக்குளை ஒழுங்கு செய்து கொண்டு புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன் வருவீர்கள். உடல் நலனில் அவ்வப்போது சிறுசிறு தொல்லைகள் தலைதூக்கும்.

இம்மாதம் உங்கள் இராசிநாதன் குரு, விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகப் போகிறார். அதன் பிறகு அதன் பார்வை முழுமையாக உங்கள் இராசியில் பதிவதால் எல்லா வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கப் போகிறது. குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே நீங்கள் குருவை வழிபடுவது நல்லது. அனுகூலம் தரும் நட்சத்திரத்தில் நீங்கள் வழிபட்டால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றிகிடைக்கும். பிறக்கும் பொழுது குரு வக்கிர இயக்கத்தில் பிறந்தவர்கள், திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

உண்டு. மாமன், மைத்துனர் வழியில் உள்ள பகை மாறும். வியாபாரத்தில் முடங்கி இருந்த பணம் இப்பொழுது கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். அலுவலகப் பணியிலிருந்து அகற்றப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மீண்டும் பணியில் சேரும்




வாய்ப்பு கைகூடும்.

குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 4 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குரு பெயர்ச்சியாகிச் செல்கிறார். அஷ்டம குரு 9 ஆம் இடம் எனப்படும் ஒப்பற்ற இடத்திற்கு வருகிறார். 5ஆம் பார்வையாக உங்கள் இராசியையும்பார்க்கிறார். எனவே தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

### மாதத்தின் பிற்பாதியில் மகிழ்ச்சி கூடும்

துலாம் இராசியில் புதன்

மாதத் தொடக்கத்தில் புதன் கன்னி இராசியில் உச்சம் பெற்று அஸ்தமன இயக்கத்தோடு இருக்கிறார். அவர் ஒக்டோபர் 2 ஆம் திகதி துலாம் இராசியில் அடியெடுத்து வைக்கிறார். ஒக்டோபர் 4 ஆம் திகதி புதன் வலிமைபெற்று புத சுக்கிர யோகத்தை ஏற்படுத்துகிறார். இதன் விளைவாக சகோதர சச்சரவுகள் அகலும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் உருவாகும். மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் தடைகள் விலகி ஓடும். பேச்சுத் திறமையால் சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மாலை சூடும் வாய்ப்பும், மக்கள் பேறு கிடைப்பதற்கான சூழ்நிலையும் அமையும். பணிபுரியும் இடத்திலிருந்த பிரச்சினைகள் தானாக விலகும். பணப்புழக்கம் தாராளமாகும். குருவின் பார்வை பலமாக இருப்பதால் சகல பாக்கியங்களை வாரி வாரி வழங்குவார். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். பொதுவாக சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

சுக்கிரனின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சுக்கிரன் பலம் பெற்றிருக்கிறார். எனவே எதிர்பாராத ஒரு சில விரயங்கள் ஏற்படலாம். உறவினர்கள் வழியில் மனக்கசப்பு உண்டாகக்கூடும். ஒக்டோபர் 11 ஆம் திகதி சுக்கிரன் வக்கிரம் அடைகிறார். இது ஒரு வழிக்கு நன்மைதான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கிணங்க அஷ்டமாதிபதி வலிமையிழக்கும் போது மிகச் சிறந்த பலன்கள் வந்து சேரும். குறிப்பாக இதுவரை பலமுறை முயற்சி செய்தும் முடிவடையாத ஒரு சில காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும்.

இம்மாதம் நவராத்திரி நாட்களில் விரதமிருந்து முப்பெரும் தேவியரை வழிபடுவதோடு, வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குரு இருப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறைவாகக் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகல ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். பணியிடத்தில் மாற்றமும், பார்க்கும் வேலைகளில் திருப்தியின்மையும் ஏற்படும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். கணவன்-மனைவி உறவு பலப்படும். பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமைக்கு மதிப்புக் கொடுப்பர். சலுகைகளும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். இம்மாதம் திங்கட்கிழமை விநாயகரையும், செவ்வாய் தோறும் முருகப் பெருமானையும் வழிபடுவது நல்லது. (முற்றும்)

# பொருட்களின் விலையை நியாயமின்றி அதிகரித்தால் கடும் நடவடிக்கை

## அரசாங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

எரிபொருள் விலையதிகரிப்பைக் காரணமாகக் கொண்டு நியாயமற்ற முறையில் பொருட்களின் விலைகளை அதிகரிப்போர் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வாழ்க்கைச் செலவு குழுவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

விலைச் சூத்திரத்துக்கமைய உலக சந்தையுடன் எரிபொருள் விலை கூடும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிலர் நியாயமற்ற முறையில் பொருட்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் ஜனாதிபதி அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் அவ்வாறான செயற்பாடுகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததாகவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இவ்வருடம்டிசெம்பர்வரை எரிபொருள் விலை அதிகரித்து பின்னர் குறைவடையும் என்கின்றபோதிலும் 2019 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய நிம்மதி கிட்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம்தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன் போது பொருட்களின் விலையதிகரிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# கூட்டு எதிரணிக்குள் மகிந்த-கோத்தா அதிகார மோதல்

## அநுரகுமார தகவல்



(கொழும்பு)

கூட்டு எதிரணிக்குள் தற்போது மகிந்த அணி, கோத்தா அணியென இரு பிரிவுகள் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மகிந்த மீண்டும் நாட்டின் தலைவராவதை எப்படியும் தடுக்க வேண்டும் என்பது கட்டாயமாகி உள்ள நிலையில், கோத்தபாய அணி 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கு எதிராக செயற்பட்டது.


தற்போது இவ்விரு அணிகளும் தத்தமது தரப்புத் தலைவர்களை ஊக்குவிக்கும் முயற்சியிலே இறங்கியுள்ளன எனவும் தெரிவித்தார்.

மல்வத்தை பீடாதிபதியை கண்டியில் நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்ற அநுரகுமார திஸாநாயக்க, 20 ஆவது திருத்த சட்டம் தொடர்பாக விளக்கமளித்தார். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டால் மக்கள் அங்கீகாரத்தின் மூலம் மகிந்த அமைச்சரவையின் தலைவராகலாம்.

இவ்வாறான நிலை ஏற்பட்டால், கோத்தபாயவின் கனவுகள் தகர்ந்து விடும். இதன் மூலம் மகிந்த அணியில் தலைமைத்துவ போட்டி வலுத்து சிக்கல் நிலை ஏற்படும். 20 ஆவது திருத்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டால் பாராளுமன்றம் அடுத்த வருடம் மார்ச் 09 ஆம் திகதிக்கு முன்னர் கலைக்கப்பட வேண்டும். அந்த நிலையில் புதிதாக பொதுத் தேர்தல் நடத்தப்படலாம்.

இவ்வாறு இடம்பெறுமானால் ரணிலின் இந்த அரசாங்கத்தின் காலம் 7 மாதங்களால் குறையும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# த.தே.ம.முன்னணியின் அலுவலக பதாகை சேதம்




(சாவகச்சேரி)

தென்மராட்சி-மீசாலைப் பகுதியில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகப் பதாகை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் கத்தியால் குத்தியும், கிழித்தும் சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபையின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் பிரகாஷ் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு மாத காலத்திற்குள் மூன்றாவது தடவையாக எமது தென்மராட்சி பகுதிக்கான மீசாலை மேற்கில் அமைந்துள்ள அலுவலகம் மற்றும் பெயர்ப் பதாகை விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

எமது கட்சி மீது வெறுப்புணர்வுள்ள போட்டி மனப்பாங்கு உள்ளவர்கள் தான் இந்த வேலையில் ஈடுபட்டிருப்பார்கள் எனவும், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்யப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (இ-30)

# கொலைச்சதி - தொலைபேசி அழைப்புப் பதிவுகள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதி செய்யும் விதமாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தொலைபேசியில் கலந்துரையாடினார் எனக் கூறப்படும் விடயம் தொடர்பில், குறித்த கலந்துரையாடல் பதிவு செய்யப்பட்ட தொலைபேசியை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்த கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரணை செய்யும் குற்றப் புலனாயவுப் பிரிவின் மனிதப் படுகொலைகள் குறித்த விசாரணை அலுவலக உதவி பொலிஸ் அத்தியட்சகர் இந்திக லொக்குஹெட்டிகே மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்க ஆகியோர் நேற்று முன்தினம் கோட்டை நீதவானிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த தொலைபேசி கலந்துரையாடலானது பதிவு செய்யப்பட்ட தொலைபேசி முறைப்பாட்டாளரான மோசடி எதிர்ப்பு படையணியின் நடவடிக்கை பணிப்பாளர் நாமல் குமாரவுக்கு சொந்தமானது எனவும் அதனை வழக்குப் பொருளாகவே கைப்பற்றியுள்ளதாகவும் சி.ஐ.டி. அதிகாரிகள் நீதவானுக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதில் உள்ள குரல் பதிவுகள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா - நாமல் குமார ஆகியோரினுடையதா என்பதை உறுதி செய்ய குரல் பதிவு பகுப்பாய்வினையும் முன்னெடுக்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு உத்தரவிடுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழர்கள் புறக்கணிப்பு தனி ஈழம் கேட்பதற்கு தீனி போடுவதாக அமையும்

## சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் தனி ஈழம் சிந்தனை வர கூடாதென்றால் தொடர்ந்தும் தமிழர்களுக்கு அநீதிகள் இடம்பெற கூடாது.

அரச நிர்வாக போட்டி பரீட்சைகளில் தொடர்ந்தும் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது தனி ஈழம் கேட்பதற்கு அரசாங்கம் தீனி போடுவதாக அமையும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அத்துடன் மலையக அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச சபை சட்ட திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டமை பாராட்டத்தக்கது.

ஆகவே இந்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அதிகார சபை சட்ட மூலம், பிரதேச சபைகள் திருத்தச் சட்டமூலம், இலங்கை ஆளணி முகாமை நிறுவக திருத்தச் சட்டமூலம் ஆகியவை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பரீட்சையில் மோசடி செய்த நாமல் நாட்டின் தலைவராக வேண்டுமா?

## பிரதியமைச்சர் அஜித் மன்னப்பெரும கேள்வி





(கொழும்பு)


கூட்டு எதிரணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளருக்கான தகுதிப்பெற்ற அனுபவம் வாய்ந்த ஒருவர் இல்லையா? பரீட்சை மோசடி செய்த நாமல் ராஜபக்ஷ நாட்டின் தலைவராக வேண்டுமா? என சுற்றுச் சூழல் பிரதியமைச்சர் அஜித் மன்னப்பெரும கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக' கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது எதிரணியினர் அடிமை மனநிலையில் செயற்பட்டு வருகின்றனர். நாட்டிற்கு பொருத்தமான அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஐக்கிய தேசிய கட்சியுடன் போட்டியிடக்கூடிய ஒருவரை பொது எதிரணியினர் தனது ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# உழவியந்திரம்-பேருந்து விபத்து இளைஞன் வைத்தியசாலையில்





(சாவகச்சேரி)

கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவியந்திரத்தினை யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்குச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து முந்திச்செல்ல முற்பட்ட வேளை உழவியந்திரத்தை பின்னால் மோதியதில் உழவியந்திரம் புகையிரத பாதையில் மோதுண்டு விபத்து ஏற்பட்டது. இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.30 அளவில் இடம்பெற்றது.


கொடிகாமம் கோயிலாமனைக்கும் இராமாவில் ஆலயத்திற்கும் இடைப்பட்ட ஏ9பிரதான வீதியில் ஏற்பட்ட இவ்விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த புவேந்திரன் வேந்தன் (வயது-27) படுகாயமடைந்த நிலையில்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-29)

# பாரதம்

# அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும்

## மோடிக்கு இம்ரான் கான் அழைப்பு



(இஸ்லாமாபாத்)

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான அமைதிப் பேச்சுவரர்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும் என இந்திய பிரதமருக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கடிதம் எழுதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ள காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண வேண்டும் என சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால், எல்லையில் அத்துமீறல், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல், பாகிஸ்தான் பயங்கரவாத குழுக்களின் தாக்குதல்கள் என அடுத்தடுத்து நடந்த அசம்பாவித நிகழ்வுகளால் பேச்சுவார்த்தைகள் முடங்கியது. இரு நாடுகளின் உறவிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்நிலையில், பாகிஸ்தானின் பிரதமராக அண்மையில் பொறுப்பேற்ற இம்ரான் கான், பாகிஸ்தானும் இந்தியாவும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் காஷ்மீர் உட்பட பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

இந்நிலையில், பதவியேற்றபோது வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுதிய இந்திய பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து இம்ரான் கான் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில், இந்தியா-பாகிஸ்தான் இடையே தடைப்பட்ட அமைதி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (7)

# படகு கவிழ்ந்து

# 30 பேர் உ



(பந்தகா)

கொங்கோ நாட்டின் வடக்கே கொங்கோ ஆற்றில் சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் 30 பேர் பலியாகினர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ நாட்டின் வடக்கே கொங்கோ ஆற்றில் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது.

இதில் வர்த்தகர்கள், மாணவர்கள் என 60 பேர் பயணித்துள்ளனர். இந்த நிலையில் அதிக எடையுடன் சென்ற படகு திடீரென கவிழ்ந்து உள்ளது.

# ஜெயலலிதா மரண விசாரணை ஆளுநர் மாளிகைக்கு கடிதம்

(டில்லி)

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் குறித்து, கேள்விகளுடன் கூடிய கடிதம் ஒன்று ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரண விசாரணையை முன்னெடுத்து வரும், ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையகம், நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

வைத்தியசாலையில் ஜெயலலிதாவை பார்த்த பின்னர், குடியரசு தலைவர் மாளிகைக்கு அறிக்கை அனுப்பப்பட்டதா என்ற கேள்வி உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுடன், குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, ஆணையகம் சார்பான தகவல்கள் தெரிவிக்கின்றன. (7)



# வடகொரியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் தயார்

## அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

வடகொரியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடர தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டள வில் வடகொரியாவை அணுவாயுத பாவனையற்ற நாடாக உருவாக்கும் நோக்குடன் பேச்சுவார்தைகளை மீண்டும் தொடரப் போவதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே சிங்கப்பூரில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டில் அணுவாயுத பாவனையை கைவிடுவதற்கு வடகொரியா உறுதி யளித்திருந்தது. எனினும், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் வடகொரியா மந்தப் போக்கில் செயற்படுவதாக குற்றம்சாட்டி அடுத்தகட்ட பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்து வந்தது.

இந்நிலையில், வடகொரிய மற்றும் தென் கொரிய ஜனாதிபதிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போது, தமது முக்கிய ஏவுகணை சோதனை தளத்தை மூடுவதற்கு வடகொரியா உறுதியளித்திருந்தது.

இதனை தொடர்ந்து வடகொரியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது. வடகொரியாவின் இந்த உறுதிப்பாட்டை தொடர்ந்து உடனடி பேச்சு வார்த்தைக்கு அமெரிக்கா தயாராகவுள்ளதாக மைக் போம்பியோ குறிப்பிட்டுள்ளார். (7)

# ரஃபேல் விமான விவகாரத்தில் விசாரணைக்கு உத்தரவிட முடியாது

## மத்திய அரசு உறுதி

(டில்லி)

ரஃபேல் விமானங்களை கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தம் குறித்த விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என காங்கிரஸ் கட்சி விடுத்த கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

விமான விவகாரம் தொடர்பில் டில்லியில் மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"ரஃபேல் ஒப்பந்தம் குறித்து அரசியல் தலைவர் ஒருவர் திரும்பத் திரும்ப பொய்களை தெரிவித்து வருகிறார். அந்தத் தலைவரை திருப்திப் படுத்துவதற்காக ஒப்பந்தம்



குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் விசாரணைக்கோ அல்லது மத்திய தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் (சிஏஜி) விசாரணைக்கோ உத்தரவிட முடியாது.

நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக 8 ஆண்டுகளாக ஏ.கே.அந்தோனி இருந்துள்ளார். இக்காலகடடத்தில், இந்திய பாதுகாப்புப் படைகளை நவீனமயமாக்கவோ அல்லது சக்திமிக்கதாக மாற்றவோ அவர் எந்த பணியையும் செய்யவில்லை.

இந்திய விமானப்படையிடம் இருக்கும் பழைய போர் விமானங்கள் திரும்பத் திரும்ப விபத்துக்குள்ளாகி வருகின்றன. எனவே இந்திய விமானப்படைக்கு புதிய விமானங்கள் தேவைப்படுகின்றன.

இதனால் நாட்டின் பாதுகாப்பு நலனை கவனத்தில் கொண்டு, சூழ்நிலையை காங்கிரஸாவது புரிந்து கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (7)




(கோலாலம்பூர்)

ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக்கை அந்நாட்டு இலஞ்ச ஒழிப்புத் துறையினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

மலேசியாவின் 14ஆவது பாராளுமன்ற தேர்தலில் யாரும் எதிர்பாராத விதமாக 60 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்க்கட்சிகள் கூட்டணி வெற்றி பெற்றது. இதையடுத்து 92 வயதான மகா

# ...து விபத்து ...யிரிழப்பு!



இந்த விபத்தில் ஆற்றில் மூழ்கி 30 பேர் பலியாகி உள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. சிலர் உயிர் தப்பியுள்ளனர்.

சிலரது உடல்கள் நீருக்கடியில் உள்ளன. அவற்றை மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டு உள்ளனர்.

அந்நாட்டின் வடமேற்கே மற்றொரு ஆற்றில் கடந்த மே மாதத்தில் நடந்த இது போன்ற சம்பவமொன்றில் 50 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# ஊழல் வழக்கில் நவாஸ் ஷெரிப்பின் சிறைத் தண்டனையை ரத்து செய்து இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் உத்தரவு


(இஸ்லாமாபாத்)

லண்டனில் சொகுசு பங்களா வாங்கியதாக தொடரப்பட்ட ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப், மகள், மருமகனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்க்கும் நோக்கத்தில் லண்டன் அவன்பீல்ட் பகுதியில் சொகுசு பங்களா வாங்கியது தொடர்பான ஊழல் வழக்கில் 11 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப், 8 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அவரது மகள் மரியம் நவாஸ் மற்றும் ஓராண்டு தண்டனை விதிக்கப்பட்ட மருமகன் சப்தர் ஆகியோர் ராவல்பிண்டி நகரில் உள்ள அடியாலா சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

ஊழல் வழக்கில் பாகிஸ்தான் பொறுப்புடைமை நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து சிறையில் இருக்கும் மூன்று பேரின் சார்பிலும் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் பிணை மனுக்கள் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவின் மீது விசாரணை நடந்துவந்த நிலையில் லண்டனில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றுவந்த நவாஸ் ஷெரிப்பின் மனைவி குல்சூம் நவாஸ் அண்மையில் காலமானார். அவரது இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள நவாஸ் ஷெரிப், அவரது மகள், மருமகன் ஆகியோர் சிறையில் இருந்து 3 நாள் பரோலில் விடுவிக்கப்பட்டனர்.



பின்னர், மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஊழல் வழக்கில் பாகிஸ்தான் பொறுப்புடைமை நீதிமன்ற நீதிபதி முஹம்மது பஷீர் கடந்த ஜூலை மாதம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

பொறுப்புடைமை நீதிமன்றம் விதித்த தண்டனையை இரத்து செய்தும், நவாஸ் ஷெரிப், அவரது மகள் மரியம் நவாஸ், மருமகன் சப்தர் ஆகியோரை சிறையில் இருந்து விடுதலை செய்தும் நீதிபதி அதார் மின்னாலா உத்தரவிட்டுள்ளார். (7)

# அமெரிக்கத் தேர்தலில் சீனா தலையிட முயற்சி

## ட்ரம்ப் குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் சீனா தலையிட முயற்சிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

உலகின் இரு பெரும் வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே மோதல் நிலவி வருகிறது. இந்த நிலையில் கடந்த 17ஆம் திகதி, 200 பில்லியன் டொலர் (சுமார் ரூ.14 இலட்சம் கோடி) சீனப் பொருட்கள் மீது கூடுதல் வரி விதித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இதற்கிடையே அமெரிக்காவில் வரும் நவம்பர் 6ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் சீனா தலையிட முயற்சிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம்சாட்டினார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், "எங்கள் விவசாயிகள் பண்ணை தொழிலாளர்கள், தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம், எங்கள் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக முயற்சிப்பதாக சீனா வெளிப்படையாகவே கூறி உள்ளது" என்று கூறினார்.

ட்ரம்பின் இந்த குற்றச்சாட்டை சீனா திட்டவட்டமாக மறுத்து உள்ளது. (7)

# மதுபானத்தில் விஷம்; 21 பேர் உயிரிழப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் விஷ மதுபானம் குடித்து 21 பேர் பலியானதோடு மேலும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவில் மதுபானங்கள் மீது கூடுதல் வரி விதிக்கப்படுகிறது. இதன் காரணமாக வீடுகளில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் மதுபானங்கள் பிரபலமாக உள்ளது.

ஆசிய நாடுகளில் இருந்து அங்கு சென்று குடியேறியுள்ள தொழிலாளர்கள் வீடுகளில் தயாரிக்கப்படும் மதுபானத்தை குடிக்கின்றனர்.

இந்நிலையில், தலைநகர் கோலாலம்பூர் மற்றும் செலங்கோர் மாகாணத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானம் குடித்தவர்களில் சுமார் 57 பேர் மயங்கி விழுந்தனர். மெத்தனோல் கொண்டு தயாரிக்கப்படுகிற இந்த மதுபானத்தில் விஷத்தன்மை கலந்து இருந்ததை அறியாமல் அவர்கள் குடித்து உள்ளனர்.

உடனடியாக அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டதையடுத்து அங்கு சிகிச்சை பலனின்றி 21 பேர் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து 9 பேரை கைது செய்துள்ள நிலையில் அவர்களிடம் தொடர்ந்து விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஊழல் வழக்கு குற்றச்சாட்டு

# மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் கைது

...திர் முகமது அந்நாட்டின் பிரதமராக பதவியேற்றார்.

முன்னதாக, மலேசிய அரசின் நிதியில் இருந்து 680 மில்லியன் டொலர் அளவுக்கு முறைகேடு செய்து அந்த தொகையை தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் மடைமாற்றி விட்டதாக மலேசிய பிரதமர் நஜிப் ரசாக் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

தற்போது அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் ஊழல் வழக்கில் சிக்கியுள்ள முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் மற்றும் அவரது மனைவி வெளிநாடுகளுக்கு மலேசியா நாட்டின் குடியுரிமைத்துறை தடை விதித்துள்ளது.

இந்நிலையில், ஊழல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக்கை அந்நாட்டு இலஞ்ச ஒழிப்புத்துறையினர் நேற்று முன்தினம் கைது செய்தனர். (7)

# 150 மனித சடலங்களுடன் ஊருக்குள் சுற்றிய லொறி

(மெக்சிகோ)

அமெரிக்காவின் மெக்சிகோவில் 150 இறந்த உடல்களுடன் லொறி ஒன்று தெரு தெருவாக சுற்றி வருவதைக் கண்டு அப்பகுதி மக்கள் பீதிக்குள்ளாகியுள்ளனர்.

அமெரிக்காவின் மெக்சிகோ பல விதமான பிரச்சினைகளில் சிக்கி தவிக்கிறது. அந்த நாட்டில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கில் மக்கள் அமெரிக்காவிற்கு முறையில்லாமல் குடியேறுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில் மெக்சிகோவின் கோடலஜாரா என்ற பகுதியில் சுமார் 150 இறந்த உடல்களுடன் தெரு தெருவாக சுற்றும் லொறி ஒன்றால் மக்கள் பெரிய அளவில் பீதியடைந்துள்ளனர்.

இந்த லொறியில் என்ன உள்ளது என்று அங்கு இருந்த மக்களுக்கு முதலில் தெரியாமல் இருந்துள்ளது. அத்தோடு குறித்த லொறி போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாக கூறி அதனை அடிக்கடி இடமாற்ற கூறிய அப்பகுதி மக்கள், இந்த லொறியை எங்கள் வீடு முன் நிறுத்த வேண்டாம், தெருவில் நிறுத்த வேண்டாம் எனவும் தெரிவித்தனர்.

ஆனால் அப்போதும் கூட, குறித்த லொறிக்குள் என்ன உள்ளது என மக்களுக்கு தெரியாமல் இருந்துள்ளது. இந்நிலையில் அந்த லொறியில் இருந்து அதிக அளவில் துர்நாற்றம் வரவே, அது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன் பின் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த லொறியினுள் முழுக்க முழுக்க இறந்த மனிதர்களின் பழைய உடல்கள் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குறித்த லொறிக்குள் சுமார் இறந்த 150 உடல்கள் இருந்துள்ளன. இவையனைத்தும் சுமார் ஒரு மாதத்திற்கு முன் இறந்த மனிதர்களின் உடல்கள் என்றும் அவற்றுக்கு யாரும் உரிமை கோராமையினால் குறித்த உடல்களை புதைக்க இடமில்லாமல் லொறியில் வைத்துள்ளார்கள்.

மெக்சிகோவில் தற்போது இத்தனை உடல்களை புதைக்க இடமில்லையாம். இதனால், இதை கடந்த ஒருவாரமாக லொறியில் வைத்துக் கொண்டு பயணித்துள்ளார்கள். தற்போது குறித்த உடல்களை புதைக்க இடமொன்று தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றை புதைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (7)

# ஜனாதிபதியைக் கொல்ல சதித்திட்டம் நாலக சில்வாவுக்கு கட்டாய விடுமுறை!

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் பரிந்துரை



(கொழும்பு)

**பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை, கட்டாய விடுமுறையில் அனுப்புமாறு, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பான தொலைபேசி உரையாடலை மேற்கொண்டதாக, நாலக டி சில்வா மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பதவியில் இருந்து, தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில், மேற்படி படுகொலைச் சதித் திட்டம் தொடர்பாக, சுதந்திரமான விசாரணைகளை உறுதிப்படுத்துவதற்காக, நாலக டி சில்வாவை கட்டாய விடுமுறையில் அனுப்புமாறு, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைத்துள்ளார். (இ-7)

# அரச ஊழியர்களுக்கு நிகரான சம்பளம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டும்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு நிகரான சம்பளம் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் செல்வராஜ் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

தோட்டத்தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்த காலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதியுடன் முடியவுள்ள நிலையில் புதிய உடன் படிக்கையின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை தீர்மானிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு மருதானையில் உள்ள சமூக சமய மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாதாரணமாக அரசாங்க ஊழியர்களின் மாதாந்த அடிப்படை சம்பளம் 32 ஆயிரத்து 40 ரூபாவாக இருக்கிறது. அத்துடன், அவர்கள் நாளொன்றிற்கு குறைந்த பட்சம் 1, 281 ரூபாவைப் பெறுகிறார்கள்.

இதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் நாளொன்றுக்கு சம்பளமாக 1281 ரூபாவை வழங்குவதற்கு புதிய கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக முதலாளிமார் சம்மேளனமும் பிரதான தோட்டத் தொழில்துறை தொழில் சங்கங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செல்வராஜ் கோரிக்கை முன்வைத்தார். (இ-7)

# மகிந்த-அரச தரப்பினருக்கிடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் இல்லை

## சு.க.அமைச்சர் துமிந்த கூறுகிறார்

(கொழும்பு)

மகிந்த தரப்பினருக்கும் அரசாங்கத் தரப்பினருக்கும் கட்சி கொள்கை தொடர்பிலான கருத்து வேறுபாடுகளே காணப்படுகின்றனவே தவிர எவ்வித தனிப்பட்ட முரண்பாடுகளும் கிடையாது எனத் தெரிவித்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்க,

அரசாங்கத்தின் அனைத்து சுகபோகங்களையும் அனுபவித்து தற்போது 16 எதிர்ப்புக் குழு என்ற நாமத்தில் இருந்துகொண்டு செயற்படுபவர்களே தங்களது தனிப்பட்ட விடயங்களை மையப்படுத்தி இன்று அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டுகின்றனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# நாம் ஒருபோதும் தனிநாடு கோரவில்லை

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



(கொழும்பு)

நாம் ஒருபோதும் தனிநாடு கோரவில்லை. தனி ஈழம் என்ற கொள்கையில் இருந்ததுமில்லை. எமக்கான அந்தஸ்துடன் வாழ்வதற்கான உரிமையையே நாம் கோரி நிற்கின்றோம் என சமூக உட்கட்டமைப்பு மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தோட்ட சமுதாயத்திரருக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புக்களை உருவாக்கவும், அவர்களுக்கான வழி காட்டல்களை வழங்கவும் பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அதிகாரசபை கவனம் செலுத்துவதுடன் இந்த அதிகார சபையின் உருவாக்கத்தின் மூலமாக மலையக மக்களின் நீண்டகால கனவொன்று நிறைவேறுகிறது.

மலையக மக்களின் வரலாற்றில் ஒரு முக்கியமான ஒரு தினமாகும். புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு அதிகாரசபைக்கான முன்மொழிவு இன்று சட்ட அந்தஸ்து பெற இருக்கின்றது. இந்த அதிகார சபையின் உருவாக்கத்தின் மூலமாக மலையக மக்களின் நீண்டகால கனவொன்று நிறைவேறுகிறது.

எனினும் தற்போது எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அமைச்சிற்கான பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்கள் போதுமானதாக இல்லை. இதனால் இந்த அமைச்சினால் உருவாக்கப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளன. இதனால் சில தாமதங்கள் ஏற்பட்டு வருவதை நான் அவதானித்து வருகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சாக்குப்போக்குச் சொல்பவர்களை மடக்குவது எப்படி?

“நேத்து ஏன் வரலை?” என்கிற கேள்விக்கு “ஒரே மழை சேர்” என்பது பதிலானால் அதற்கு மேல் நம்மால் ஒன்றும் பேச முடிவதில்லை. ஆனால் இப்படிச் சொல்பவர்களை அப்படியே விட்டுவிடக் கூடாது. “அவ்வளவு மழையிலேயும் நீ வந்திருந்தியேன்னு நான் சந்தோஷப்படணும். இந்த மழைல ஏன் வந்தேன்னு கேட்கும்படி நீ நடந்திருந்தேன்னா, நான் உண்மையிலேயே உன்னைப் பாராட்டியிருப்பேன். நீ அதுக்கு இடங்குடுக்காமப் பண்ணிட்டியே ஏன்? என்று இவர்களை மடக்கினால் அடுத்த முறை புயலே வீசினாலும் வந்து விடுவார்கள். மற்றவர்கள் சொல்லும் காரணங்களைக் கேட்டுக்கொள்வது அவர்கள், அள்ளி விடும் சாக்குப் போக்குகளைச் சகித்துக்கொள்வது என்று ஆரம்பித்து விட்டால் அதற்கு எல்லையே இராது.

சிறந்த நிர்வாகிகள் என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் சாக்குப் போக்குச் சொல்கிறவர்களைச் சும்மா விடுவதே கிடையாது உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள்.

சாக்குப் போக்குச் சொல்கிறவர்களுக்கு இடம் கொடுப்பதன் மூலம் நாம் இரு தவறுகளைச் செய்கிறோம். முதலாவது இவர்கள் சோம்பேறிகளாகவும் உதவாக்கரைகளாவும் ஆவதற்கு நாமே அனுமதித்து விடுகிறோம். இரண்டாவது நாம் சரியான ஏமாளிகள் என்பதையும் நாமே அனுமதித்து ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வெற்றிகளை வழங்குகிறோம். இத்தகைய வெற்றிகளை இவர்கள் பெற நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.


இவர்கள் சொல்லும் சாக்குப் போக்குகளை அக்குவேறு ஆணி வேறாக பிய்க்க வேண்டும். ஏராளமாக துணைக் கேள்விகளைக் கேட்க வேண்டும். இப்படிக் குடை குடை என்று குடைகையில் அவர்களாக ஏதாவது உளறி வைப்பார்கள். தங்களுடைய தவறான நம்பிக்கைகளைச் (mis conceptions) சொல்வார்கள். உடனே அவற்றைப் பிலுப்பிலு என்று பிடித்துக் கொள்ள வேண்டும் இறுதிப் பதில் அல்லது உபதேசம் நம்முடையதாக இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் சொல்வது என்றால் இந்தாளிடம் நிச்சயம் காரணம் சொலித் தப்பிக்கவே முடியாது என்கிற உணர்வை ஏற்படுத்தி விட்டால் போதும் அப்புறம் எவரும் நம்மிடம் சாக்குப் போக்கே சொல்ல மாட்டார்கள் காரியம் நடக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## ஜெல்லி மீன்கள்




படம்1. ஜெல்லி மீனின் உடலமைப்பு


ஜெல்லிமீன்களானவை இழுது மீன்கள், சொறிமுட்டை, கண்ணாடி மீன்கள் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இவை 205 மில்லியன்ஆண்டுகள்பழைமை வாய்ந்த உயிரினம். பார்ப்பதற்கு மிக அழகாக காணப்பட்டாலும் இவற்றில் பல இராட்சத அளவுகளில் வளரக்கூடியனவாகவும் ஆபத்தானவையாகவும் உள்ளன. இவை உலகம் முழுவதிலும் கடல் மேற்பரப்பு தொடக்கம் பெருங்கடலின் மிக ஆழமான மற்றைய உயிரினங்கள் வாழ உகந்ததல்லாத இடங்களில் கூட பரந்துபட்டு காணப்படுகின்றன. பெரும்பாலானவை கடல்நீரிற்குரியவையாகவும் சில நன்னீரிற்குரியவையாகவும் காணப்படுகின்றன.

இதுவரை 2000 ற்கும் மேற்பட்ட இனங்கள் கண்டறியப்பட்டாலும் இவற்றின் பரந்துபட்ட நிலவுகை காரணமாக இன்னும் இவற்றின் ஏராளமான இனங்கள் அறியப்படாமலேயே உள்ளன.

ஜெல்லிமீன்கள் உண்மையான மீன்கள் அல்ல. இவை முதுகெலும்பற்றவை. கணம் குழியுடலி (Cnidaria)யை சேர்ந்தவை. பவளப்பாறைகள், கடல் அனிமனி மற்றும் கடல் விசிறி ஆகியனவும் இவ்வகையைச் சார்ந்தவையே. இவ் ஜெல்லிமீன்கள் மிகவும் எளிய உடலமைப்பைக் கொண்ட பல கலத்தாலான விலங்குகளாகும் (படம்1).

இவை ஆரைச்சமச்சீரானவை. இதன் மொத்த உடற்பகுதியில் 5% மட்டுமே திடப்பொருளாளானது. மீதம் 95% மும் நீராலானது. குடை போன்ற அமைப்புடையவை. குடையின் அடிப்பாகத்தில் 4 முதல் 8 பரிசக்கொம்புகளால் சூழப்பட்ட வாய் காணப்படும். இவை 1 மில்லி மீற்றர் தொடக்கம் 7 அடிக்கும் அதிகமான குடை விட்டம் கொண்டனவாக காணப்படலாம். பரிசக் கொம்புகளின் நீளம் சுமார் 100 அடிக்கு மிகுந்தும் செல்லலாம்.

உதாரணமாக போத்துகீசு மான் ஒஃப் வார் (**Physalia utricularis**) படம் 2). இவற்றின் குடை விட்டம் 2 மீற்றர் வரையில் காணப்படலாம். உணர்கொம்புகள் கடற்பரப்பில் 15 மீற்றர் வரை பரந்து காணப்படலாம்.




(படம் 2-Physalia)

ஜெல்லிமீன்கள் தானாக நீந் தித் திரியக் கூடியவையாயினும் பெரும்பாலும் அலைகளின் நீரோட்டங்கள் மற்றும் காற்று மூலம் எடுத்துச்செல்லப்படுகின்றன. சில ஜெல்லிமீன்கள் மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்ததாக காணப்படினும் பல




சாதாரணமானவையாகவே உள்ளன. ஜெல்லிமீன்கள் அவற்றின் உணர்கொம்புகளை பயன்படுத்தி கொட்டும் ஆற்றல் கொண்டவை. உணர்கொம்புகள் இதன்போது நச்சுத்தன்மையான பதார்த்தத்தை இரையின் உடலினுள் செலுத்துவதன் மூலம் அவற்றை உணர்விலக்கச் செய்து பின் உட்கொள்கின்றன. பெரும்பாலும் இவை இரவிலேயே வேட்டையாடுகின்றன. இந் நச்சுத்தன்மை அவற்றின் இரைகௌவிகளில் இருந்து பாதுகாப்பதற்காகவும் பயன்படுகின்றன.

இவற்றின் உடல் ஒளி ஊடுருவும் தன்மை கொண்டது. இதன் காரணமாக இவை மிதந்துவருவது பெரும்பாலும் கண்களுக்குப் புலப்படுவது இல்லை. சில கண்கவர் வண்ணங்களிலும் காணப்படுகின்றன. இதனால் கடலில் நீந்திச் செல்லும் போது சில வேளைகளில் இவற்றினால் மனிதர்கள் தாக்கப்படலாம். ஆயினும் மனிதரில் இந் நச்சு சொறி, சிறங்கு, அழற்சி போன்ற சிறு இடையூறுகளையே ஏற்படுத்துகின்றன. சில வகை சொறிமுட்டைகளின் தாக்கம் மனிதரில் மூச்சடைப்பை ஏற்படுத்துவதுடன் இதயத்தையும் செயழிலக்கச் செய்து மரணத்தை ஏற்படுத்தவல்லன. இவ் உணர்கொம்புகளின் வீரியம் மிதவெப்பமண்டல கடற்பகுதிகளில் உள்ள ஜெல்லிமீன்களில் மிகஅதிகளவில் காணப்படுவதுடன் உயிர்க்கொல்லியளவு வலிமையானதாகவும் உள்ளது. இந்நஞ்சு மனிதனை 30 நொடிகளில் கொல்லக் கூடியது.

**Compass** ஜெல்லிமீன்கள் (**Chrysaora quinquecirra**) மிக வீரியமான கொட்டுகை கொண்டவை. இவற்றின் உணர்கொம்புகள் 1-2 மீற்றர் வரை காணப்படலாம். இந்துசமுத்திர பெட்டி ஜெல்லிமீன்களின் கொட்டுகை உடலில் நிறமூட்டலை ஏற்படுத்தக் கூடியன. இது மாற 3-4 மாதங்களாகும். ஆயினும் இலங்கை ஜெல்லிமீன்கள் பெருமளவில் அபாயமற்றவை.

**Lion's mane** ஜெல்லிமீன்கள் (**Cyanea sp**) இவை 12-18 அங்குல விட்டமுடையவை. சில 3 அடி வரை வளரக்கூடியவை.

யாழ்.குடாவை சூழவுள்ள கடல் பகுதிகளில் பல்வேறு வகையான ஜெல்லி மீன்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில மனிதனுக்கு. குறிப்பாக மீனவர்களுக்கு ஆபத்தானவையாக உள்ளன. இவற்றில் **Catostylus mosaicus, Cyanea capillata** போன்ற இனங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவற்றின் தாக்கமும் அவதானிக்கப்பட்டுள்ளது. தவிர மூன் ஜெல்லி மீன்களும் காணப்படுகின்றன.



படம் 4. Compass ஜெல்லிமீன்கள் (Chrysaora quinquecirra)

ஜெல்லிமீன்கள் பெரும்பாலும் திரள் போன்று கூட்டமாகவே இடம்பெயர்கின்றன. இக் கும்பலில் 100 தொடக்கம் 1000 வரையான ஜெல்லிமீன்கள் காணப்படலாம். இவற்றின் எண்ணிக்கை பருவத்தை பொறுத்தும் உணவு கிடைக்கும் அளவினைப் பொறுத்தும் மாறுபடும். அண்மைக்காலங்களில் இவற்றின் பெருக்கம் மிக அதிகளவில் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது.

இவற்றின் துரித பெருக்கம் 'ஜெல்லிமீன்களின் மலர்ச்சி' (**Jellyfish bloo ming**) என அழைக்கப்படுகின்றன. ஒரு சில இனங்களே இம் மலர்ச்சியில் பங்கேற்கின்றன. இதற்கு பல காரணங்கள் காணப்படலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதில் மனித செயற்பாடுகளே முக்கிய பங்கு வகிக்கின்றன.

மிகையான மீன்பிடி நடவடிக்கைகள், ஜெல்லிமீன்களின் இரைகௌவிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி, கழிவுகளின் வெளியேற்றத்தால் கடல்நீரில் அதிகளவான போசணைப் பதார்த்தங்களின் சேர்க்கை, புவி வெப்பமாதலினால் ஏற்படும் கடல்நீர் வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றம், கடல்நீரோட்டம், காற்று வீசும் திசை, அவற்றின் இரையினளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு போன்ற பல காரணிகள் ஜெல்லி மீன்களின் மலர்ச்சியில் பங்களிப்பு செய்கின்றன. கடல்நீரில் வெளியிடப்படும் கழிவுப் பதார்த்தங்களால் அதிகரிக்கும் போசணையின் அளவு பிளாங்டன்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன.

இது நற்போசணை யாக்கம் எனப்படும். ஜெல்லி மீன் கள் பெரும்பாலும் இப் பிளாங்டன்களையே இரையாக்குகின்றன.

இதனால் இரையினளவு அதிகரிக்கும் போது ஜெல்லிமீன்களின் பெருக்கமும் அதிகரிக்கின்றது. ஜெல்லி மீன்கள் மற்றைய மீன்களின் முட்டை மற்றும் குஞ்சுகளையும் உட்கொள்கின்றன. இதனால் அச் சூழற்றொகுதியினை மீளப் பழைய நிலைக்கு கட்டியெழுப்புவது சற்றுக் கடினமான காரியமாக உள்ளது.

ஜெல்லிமீன்கள் துரித வளர்ச்சி வீதம் கொண்டவை. சில மாதங்களிலேயே முதிர்ச்சி நிலையை அடைந்து விரைவாக இனம் பெரு கும் ஆற்றல் கொண்டவை. பெரும்பாலும் இனப்பெருக்க செயற்பாடு முடிவடைந்ததும் இவை இறந்து விடுகின்றன.

கடல் நீரோட்டம் மற்றும் காற்று வீசும் திசையில் இவ் ஜெல்லி மீன்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. குறிப்பாக இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கும் காலங்களில் இவை கடல்மேற்பரப்பை பெருமளவில் ஆக்கிரமிப்பு செய்கின்றன. மற்றும் இவை கடல்நீரோட்டத்திற்கு எதிராகவும் நீந்தி திரளாகக் கூடியன.




படம் 5. ஜெல்லி மீன்களின் கொட்டும் அங்கம் (Nematocyst)

(தொடரும்....)

சுபோதினி கணேசலிங்கம்
செயன்முறைக் காட்டுநர்
விலங்கியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

**புதிர் 212 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 212 க்கான கேள்வியும் விடையும்:**

**DNA** இன் கட்டமைப்பை கண்டறிந்த விஞ்ஞானிகளின் பெயர் என்ன?

**James Watson and Francis Crick**

# அச்சுவேலி மத்திய கல்லூரியின் 125 ஆவது நிறைவு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நாளை 22ஆம் திகதி சனிக்கிழமையும் அச்சுவேலி இராஜமாணிக்கம் திருமண மண்டபத்தில் இடம் பெறும். தொடக்க நாள் நிகழ்வில் பரிசளிப்பும் கலை நிகழ்வும் பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சி.மாணிக்கராசா மற்றும் கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், கௌரவ விருந் தினர்களாக பழைய மாணவர் பொறியியலாளரான வை. சதானந்தன் மற்றும் அச்சு வேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம். ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறைவு நாள் நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் இடம் பெறும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ் .வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் மற்றும் புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி. நிரோஷ், கௌரவ விருந்தினராக கனடா கிளை, பழைய மாணவர் சங்க தலைவர் தே. ஜெயமோகன் ஆகியோர் கலந்து கொள்வர். இ

# சாட்டி சிந்தாத்திரை மாதா சொரூபத்தில் இரத்தக்கண்ணீர்



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை. சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் உள்ள மாதா சொரூபத்தில் இருந்து இரத்தக் கண்ணீர் வெளிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து மாதா சொரூபத்தை பார்வை யிடுவதற்காக பெருமளவான மக்கள் அங்கு படை யெடுத்து வருகின்றனர். (ம)

# அரசியல் ஆர்வமுள்ள பெண்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஜெசாக் நிறுவனமானது USAID-SDGAP நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்கின்ற பெண்களை அரசியல் பங்காளிகளாக்குகின்ற செயற்பாட்டின் ஒரு பகுதியாக யாழ்.மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 25 அரசியல் ஆர்வமுள்ள பெண்களுக்கான பயிற்சி நெறி கடந்த செவ்வாய்க்கிழமை தியாகி அறக்கொடை நிறுவன (TCT) மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.சமூக செயற்பாட்டு மைய நிறுவன இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதோடு சிறப்பு பேச்சாளராக பிரபல அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் கலந்து கொண்டு பெண்களை அரசியலில் ஊக்கப்படுத்துகின்ற வகையில் கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

முழுநாள் பயிற்சி நிகழ்வின் வளவாளராக இத்துறையில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேர்ச்சி பெற்ற அபிராமி வன்னியகுலம் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 25 பெண்கள் பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர். இப்பயிற்சி நிகழ்வுகள் தொடர்செயற்பாடுகளாக இடம்பெற இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புத்தூர் குகனின் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை ஓய்வு நிலை அதிபர் குகதாசன் குகானந்தனின் (புத்தூர் குகன்) "புத்தூர் குகனின் கவிதைகள்" நூல் வெளியீடு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் குகன் மண்டபத்தில் தலைவர், ஓய்வு நிலை களஞ்சியப் பொறுப்பாளர் த.சண்முக நாதன் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வி பண் பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விரு ந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஸ், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பிரத்தியேகச் செயலர் ந.அனந்தராஜ், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணி ப்பாளர் வே.பால சுப்பிரம ணியம், புத்தூர் மேற்கு கிராம உத்தியோகத்தர் செ.சுதர் சன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் செ.சதானந்தன், வலி.கிழக்கு செயலக கலாசார உத்தியோகத்தர் இ.ஜோன்சன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆசிரியர் கவிஞர் அஜந்த குமார் ஆய்வுரை வழங்குவார். (இ)

# "கேசவன் கேண்மை" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் வல்லிபுர ஆழ்வார் ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கில் இடம்பெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று இரவு 8 மணியளவில் கதிர் தொலைக்காட்சியின் காப்பாளரும் ,ஓய்வு நிலை அரசாங்க அதிபருமான வே.விஸ்வலிங்கம் தலைமையில் அதிபர் செல்வநாயகம் கேசவன் கேண்மை என்னும் தலைப்பில் சொற்பொழிவுவாற்றுவார். (இ

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 6 விதி எண் 4


சுக்கிரன் இராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலை அறிவு நிரம்பியவர்கள். சுதந்திரப் பிரியர்கள். பிறரைக் கவரும் பேச்சும், எழுத்தும் இருக்கும். தைரியசாலிகள். தன்னம்பிக்கை அதிகம் உடையவர்கள். கதை, கவிதை, எழுதுவதில் கில்லாடிகள். ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் சாமர்த்தியசாலிகள். மனம் எந்நேரமும் இன்பத்தையே நாடிச் செல்லும். தீர்க்கமான முடிவெடுத்த பின்னரே காரியத்தில் இறங்கிச் செயலாற்றுவார்கள். மேன்மையான குணநலன்களைப் பெற்றவர்கள். நல்ல மனிதர்கள் என்ற பாராட்டைப் பெறுவார்கள்.

இவர்களின் பேச்சில் வசீகரமிருக்கும். கற்பனை வளமிக்கவர்கள். ஜன வசியமுடையவர்கள். கவர்ச்சிக்கு மயங்கக் கூடியவர்கள். கலை, இலக்கியம், சினிமா தத்துவம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள். அழகான வளைந்த முடியும், வசீகரமான முகமும் உடையவர்கள். வசீகரமான கண்கள் உடையவர்கள். உலக சுகத்தை அனுபவிக்க ஆர்வம் இருக்கும். வாகனப் பிரியர்கள். ஜோதிடம், மனோவசியம், மருத்துவம் சிறக்கும். புதுப்புதுக் கருத்துக்களை வெளியிடுவார்கள். மனதில் கற்பனா சக்தி அதிகமிருக்கும்.

பலருக்கு உதவும் மனப்பான்மை உடையவர்கள். பலரால் நல்ல மனிதர்கள் என்று போற்றப்படுவார்கள். சோம்பேறிகளைப் பார்க்க விரும்பமாட்டார்கள். நறுமணப் பொருட்கள், மலர்கள், செடிகள், வாசனைத் திரவியங்கள் மீது மிகுந்த ஆசையுடையவர்கள். உடலை வளைக்காமல் மூளை பலத்தாலும், வாய்ப்பேச்சுத் திறனாலும் சம்பாதிக்க முன் வருவார்கள். உடலில் ஜீவசக்தி நிரம்பியிருக்கும். எதிலும் நிதானத்துடன் செயற்படுவார்கள். புகழின் பிறப்பிடமாவார்கள். சமாதானத்தையும், அமைதியையும் விரும்புவார்கள். வீடு, நாடு, உலகமெங்கும் அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவார்கள்.

மற்றவர்களின் துயர் துடைக்க அரும்பாடுபடுவார்கள். சுக்கிரன் ஆதிக்கம் வலுத்துவிட்டால் மகாத்மா போலத் தியாகச் செம்மலாக இருப்பார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாது. ஊனமுற்றவர்களுக்கு உதவ முன்வருவார்கள். பிறருடைய மானத்தைக் காப்பார்கள். மற்றவர்கள் நலமுடன் வாழ ஓடோடி உழைப்பார்கள். ஆண்டவன் இவர்களைக் கைவிடமாட்டான். சில நேரத்தில் எடுத்த காரியத்தை முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டு அடுத்த காரியத்திற்குச் சென்று விடுவார்கள். பிறருக்காக ஜாமீன் கையெழுத்துப் போட்டு மாட்டிக் கொள்வார்கள். சுகபோக வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பார்கள். எப்போதும் உல்லாசமாகவே இருப்பார்கள்.

புகழின் மீது அதிக ஆசை கொண்டு செலவழிப்பார்கள். பணம் சம்பாதிக்க ஓயாது உழைப்பார்கள். அதிர்ஷ்டத்தின்




அருளால் எவ்விதக் குறையுமில்லாமல் வாழ்வார்கள். உல்லாசமாக உண்பதும், உறங்குவதும் திரிவதுமாக காணப்படுவார்கள். அரசியலில் சாதிப்பார்கள். பலதுறை அனுபமிக்க இவர்கள் விளையாட்டுத் துறைகளில் வியத்தகு சாதனைகள் செய்வார்கள். புகழ் பெற்ற சினிமா நடிகர், நடிகைகள் இந்த எண்ணில் காணப்படுவார்கள். உடனுக்குடன் வேலையாட்களை ஏவுவார்கள். மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி முன்னேறுவார்கள். காதல் நிறைந்த வாழ்க்கை வாழ்வார்கள். காமசுகத்தை எல்லையில்லாமல் அனுபவிப்பார்கள். கணவன்-மனைவிக்கிடையே காமம் ஊற்றெடுக்கும். சமுதாயத்தில் முக்கியஸ்தர்கள் ஆவார்கள். இவர்களின் பேச்சும், எழுத்தும் உலகையே உலுக்கும். நண்பர்களிடம் மிகப் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வார்கள். சில நேரத்தில் அவசரமாகக் காரியத்தில் குதிப்பார்கள். நேர்மை, பாசமுள்ளவர்கள். நகைச் சுவை உணர்ச்சி மிக்கவர்கள். புன்னகை மிக்க முகமிருக்கும். எதார்த்தவாதிகள். தன்னை நம்பி வந்தவருக்கு எல்லா உதவிகளையும் செய்வார்கள்.

தெளிவான சுயசிந்தனை இருக்கும். அரசியல், சட்டம் போன்றவற்றில் அதிக ஆர்வம் இருக்கும். சில நேரத்தில் இருபுத்தியிருக்கும். எல்லாவற்றுக்கும் அழகு பார்க்கும் குணமிருக்கும். கடின உழைப்பாளிகள். கடவுள் பக்தி அதிகமுடையவர்கள். எறும்பு போன்று அதிக சுறுசுறுப்பு வாய்ந்தவர்கள். சுவையான உணவு உண்பதில் அலாதி பிரியமிருக்கும். ஆண்-பெண் இருபாலாருக்கும் நட்பு சிறப்பாக இருக்கும். தர்மவான்கள். எதையும் எளிதில் புரிந்து கொள்வார்கள். பலருக்கும் வழிகாட்டியாக விளங்குவார்கள். மண வாழ்வால் நல்ல திருப்பமுண்டாகும். வளைந்து கொடுக்கும் பண்புடையவர்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,3,12,21,30,4,13,22,31

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர் நீலம், மஞ்சள், பொன்நிறம், பச்சை

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
கோமேதகம், நீலக்கல், மரகதம், அக்கோமரின், ஜேட். டெரிடாட்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

49

இவ்விடயம் சம்பந்தமாக ஆழ்ந்து நோக்குகையில் யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியர், உக்கிரசிங்கன் என்ற ஓர் ஐதீகக் கதைக்கு பாளி, சிங்கள நூல்களில் கூறப்பட்ட விஜயன் பற்றிய ஐதீகக் கதைகளை முன்மாதியாகக் கொண்டிருப்பார் என்பதனை அறிந்துகொள்ள முடியும்.

அதே போன்றுதான் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையின் வடபாகத்தில் ஆட்சி செய்த மாகன் கதையை, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்த கற்பனைப் பாத்திரமான யாழ்பாடியின் பின் வருகின்ற சிங்கை ஆரியன் கதை யோடு தொடர்புபடுத்தியுள்ளார்.



வீரசைவன் கலிங்க மாகன்

> “யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்தைப் பற்றி நோக்கும் பொழுது, அவ் இராச்சியம் கலிங்க மாகனினால் தோற்றுவிக்கப்பட்டது எனக் கொள்ள முடிகிறது. அவ்வாறெனில் கலிங்க மாகன் 1262க்கு முன்பாக அவ் இராச்சியத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். ஏனெனில் 1262ஆம் ஆண்டி லிருந்து, யாழ்ப்பாண இராச்சியத்திற் சாவகமன்னன் சந்திர பானுவின் ஆட்சி நடைபெற்றமையை பாண்டியக் கல்வெட்டினூடாக அறியமுடிகிறது”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

ஏற்கனவே கூறப்பட்டதுபோல யாழ்பாடி கதையினூடாகக் கலிங்க மாகன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னன் என்பதைக் கண்டு கொள்ள உதவுவதாக அமைகின்றது.

மேற்கூறப்பட்ட யாழ்பாடி கதையை யொட்டி மதுரையிலிருந்து வரவழைக்கப்பட்ட சிங்கை ஆரியன் கதை கூறப்படுகின்றது. இச் சம்பவங்களை உற்று நோக்குமிடத்து, மதுரையிலிருந்து வரவழைக்கப்பட்டவனாகக் கருதப்படும் சிங்கை ஆரியன் அல்லது கூழங்கை ஆரியன் அல்லது கூழங்கை சக்கரவர்த்தி என்பவன் கலிங்க மாகனே எனவும் அவனே யாழ்ப்பாணச் சுதந்திர இராச்சியம் தோற்றம்பெற கி.பி.பதின் மூன்றாம் நூற்றாண் டின் நடுப்பகுதியில் அடிகோலியவன் எனவும் கருதலாம்.

இவ்விடயம் பொறுத்து சற்று ஆழமாக நோக்குமிடத்து, விசய கூழங்கை என்ற பெயர் விசய காலிங்க என்ற பெயரின் திரிபாயிருக்கலாம் என ஞானப்பிரகாசர் தெரிவித்துள்ளமை மிக முக்கியமான ஒரு விடயமாகும். நிக்காய் அங்க்ரஹய, சத்தர் மத்னாகர ஆகிய பாளி, சிங்கள நூல்களிலே மாகனுக்குக் காலிங்க விஜயபாகு என்ற பெயர் இருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பெயர் தமிழிலே விசய காலிங்க என மாறியிருக்கலாம். மேலும் காலிங்கை என மருவி, ஏட்டுப் பிரதிகளிலே கூழங்கை எனப் பிழையாக எழுதப்பட்டிருக்கலாம். இதன் பின், மன்னனுடைய ஒரு கை வழங்காதிருந்த காரணத்தினால் அவன் கூழங்கை என்ற பட்டப் பெயரைப் பெற்றான் என ஒரு கதை எழுந்திருக்க வேண்டும்.

இதனையே யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியர் விசய கூழங்கை எனக் கூறியுள்ளார் எனக் கொள்ள முடிகிறது. எனவே, விசய கூழங்கைச் சக்கரவர்த்தி என்னும் பெயரில் விசய என்ற பெயருக்குப் பின்பு கூழங்கை என்பது இடம் பெறுவதால் அது ஒரு பட்டப்பெயராக இருந்திருக்கமுடியாது. அப்படி ஒரு பட்டப்பெயராக வந்திருப்பின், வழக்கமாகத் தமிழில் பட்டப் பெயர்கள் எழுதப்படுவதுபோல் அந்தகக்கவி வீரராகவர், கணைக்கால் இரும்பொறை, செவிட்டுப் பொன்னையன் என்ற பெயர்கள் போல் இம்மன்னனுடைய பெயரும் கூழங்கை விசய சக்கரவர்த்தி என்றே எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது அப்படி எழுதப்பட்டமையினால் விசய கூழங்கை சக்கரவர்த்தி என்னும் பெயர் விசய காலிங்க சக்கரவர்த்தி என்னும் பெயராகவே இருந்திருக்க வேண்டும் எனக் கொள்வதே சரியானதாகும்.

மேலும், யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட முதலாவது ஆரிய மன்னனாகப் பதவி பெற்றவனுடைய பெயர் காலிங்க ஆரிய என மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளமை மேற்படி கூற்றை உறுதிப்படுத்துகின்றது.

அத்தோடு, தமிழ் வரலாற்று மரபிலே விசய காலிங்கன் என்ற பெரைப் பெற்ற மன்னன் மாகன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையினரின் முதலாவது மன்னன் எனப் பிழையாகக் கருதப்பட்டமையினால் அவனுக்கு ஆரியன் என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருந்தது எனக் கூறலாம். சிங்கை ஆரியன் என்ற பெயர், பதினான்காம் நூற்றாண்டளவிலேயே யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரிய சக்கரவர்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வம்சப் பெயராகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், மாகன் பல தமிழரையும், கேரளரையும் இந்தியாவிலிருந்து வரவழைத்து வட இலங்கையில் குடியிருத்தினான் எனச் சிங்கள நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே எடுத்துக் காட்டப்பட்டதுபோல, விசய கூழங்கை என்பவன் இந்தியாவிலிருந்து குடிகளை வரவழைத்து வட இலங்கையில் குடியேற்றினான் எனத் தமிழ் வரலாற்று நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக சிங்கை ஆரியன் எனப்படும் விசய கூழங்கைச் சக்கரவர்த்திக்கும், மாகன் என அழைக்கப்படும் விசய காலிங்க மன்னனுக்கும் இடையில் காணப்படுகின்ற மேற்படி ஒற்றுமைகளிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு உரியதாக யாழ்ப்பாணத்து வைபவ மாலையில் இடம்பெற்ற புனைகதையில் சொல்லப்பட்ட யாழ்ப்பாண இராச்சிய முதல் மன்னன் விசய கூழங்கை சக்கரவர்த்தி என்ற பாத்திரம், கி.பி பதின் மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தைத் தோற்றுவித்த விசய காலிங்க மன்னன் என்பது தெளிவாகிறது.

இவ்வாறான ஒற்றுமைகளோடு, யாழ்ப்பாணத்து அரசர்களுடைய குலப்பெயர், நகரப்பெயர், சின்னம் ஆகியவற்றை நோக்குமிடத்து யாழ்ப்பாண இராச்சியத்தைத் தாபித்தவர்கள் கலிங்க நாட்டுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பது புலனாகின்றது. யாழ்ப்பாணத்து மன்னர்கள் நந்தி இலச்சினையைத் தங்களுடைய நாணயங்களிலும், கொடிகளிலும் பொறித்தனர். இந்த இலச்சினை கலிங்கத்தை ஆண்ட வம்சத்தின் முத்திரையாகவே காணப்படுகின்றது.

இந்த முத்திரைகளில் காணப்படுவது போன்று நந்தி இலச்சினை, பிறை, நட்சத்திரம் ஆகியன யாழ்ப்பாணத்து மன்னர்களுடைய நாணயங்களிலே பொறிக்கப்பட்டு உள்ளதைக் காணலாம்.

மேலும், யாழ்ப்பாண இராச்சியத்து மன்னர் கலிங்கத்துக் கங்கர்களுடன் தொடர்புடையவர்கள் என்பது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விருதுகளாகிய கங்கை ஆரியன், கங்கநாடர் என்ற பெயர்கள் மூலம் தெரிகின்றது. கலிங்க மாகனுக்குப் பின் ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்திகளும் தொடர்ந்து அம் மரபுகளையே பின்பற்றியிருக்கின்றனர்.

மேலும், யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கிய சிங்கை நகர் என்ற பெயரும் கலிங்கத் தொடர்பை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. ஏனெனில், கலிங்க தேசத்தில் சில வம்சங்களின் தலைநகராக அமைந்த ஸிங்ஹபுர என்ற நகரத்தின் பெயரை ஒத்ததாக சிங்கைநகர் காணப்படுகிறது.

இதனால், யாழ்ப்பாண இராச்சியத்தைத் தோற்றுவித்தவர்கள், தங்கள் நாட்டின் தலைநகர் ஒன்றின் பெயரையொத்ததாகப் புதிய தலைநகருக்கு பெயரிட்டார்கள் என்று கொள்ளவும் இடமுண்டு.

மேற்கூறப்பட்டவைகளின் பின்னணியில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்தைப் பற்றி நோக்கும் பொழுது, அவ் இராச்சியம் கலிங்க மாகனினால் தோற்றுவிக்கப்பட்டது எனக் கொள்ளமுடிகிறது. அவ்வாறெனில் கலிங்க மாகன் 1262க்கு முன்பாக அவ் இராச்சியத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

ஏனெனில் 1262ஆம் ஆண்டிலிருந்து, யாழ்ப்பாண இராச்சியத்திற் சாவகமன்னன் சந்திரபானுவின் ஆட்சி நடைபெற்றமையை பாண்டியக் கல்வெட்டினூடாக அறியமுடிகிறது. அதற்குப் பின் பதின் மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பித்தது.

(தொடரும்)

# ட்ரம்பின் நடவடிக்கையே டொலரின் பெறுமதி அதிகரிக்கக் காரணம்

## அரசாங்கம் விளக்கம்

(கொழும்பு)

அமெரிக்க வங்கிகளின் வட்டிவீதத்தை அந்நாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் அதிகரித்துள்ளார். குறிப்பாக 0.2 இலிருந்து 1 வீதமாக வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் உலகில் பல நாடுகளிலும் டொலரின் பெறுமதி அதிகரிக்கின்றது. இந்தியாவில் 11 ரூபாவால் அதிகரித்திருக்கின்றது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைகின்ற நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை ரூ. 167.41 சதமாக உயர்வடைந்தது. கொள்வனவு விலை ரூ. 163.83 சதமாக உயர்வடைந்துள்ளது.

இலங்கையில் இதுவே மிகக்கூடிய அளவான டொலர் விற்பனை விலையாக கருதப்படுகின்றது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன இதனைத் தெரிவித்தார். (இ)

# தகவல் அறியும் உரிமை வாரம் நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமை தொடர்பான சர்வதேச தினம், எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு, தகவல் அறியும் உரிமை வாரத்தை பிரகடனப படுத்தியுள்ள நிலை யில் தகவல் வாரம்,இன்று 21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைகளைப் பயன்படுத்தும் முறை குறித்து. பொதுமக்களுக்கு இதன் ஊடாக தெளிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாக, ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

"கிராமத்திற்கு தகவல் உரிமை" என்ற தலைப்பில், தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பிலான சட்டம் குறித்த நடமாடும் சேவைகளும் இந்த வார காலத்திற்குள் நடைபெறுமெனவும், ஊடகத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளை உள்ளடக்கிய வகையில், பல்வேறு போட்டி நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படவுள்ளதோடு இதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கும் தகவல் உரிமை தொடர்பாகத் தெளிவுபடுத்துவதற்கு, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு எதிர்பார்த்துள்ளது. (இ-7)

# இலங்கையை விடவும் இந்தியாவிற்கே பாதிப்பு

## -பிரதமர் ரணில்-



(கொழும்பு)

டொலரின் பெறுமதி உயர்வினால் எமது நாட்டை விட இந்தியாவே வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து வருகின்ற அதேவேளை ஏனைய நாணயங்களின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்வாறான தொரு நிலையிலும் கூட கல்விக்கான செலவுகளை நாம் அதிகரித்தவாறே இருக்கின்றோம். கல்வி அபிவிருத்திக்கான செலவுகள் சிறந்த எதிர்காலத்திற்கான முதலீடு என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

கொழும்பு தாருஸ்லாம் கல்லூரிக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தின் திறப்புவிழா நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தேங்காய் எண்ணெய் விற்பனை சட்டத்தை கடுமையாக்க தீர்மானம்

(கொழும்பு)

போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயை மாத்திரம் விற்பனை செய்ய, விரைவில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

இவ்வாறு விற்பனை செய்வது தொடர்பிலான சட்டத்தைக் கடுமையாக்குவதற்கு, தென்னைப் பயிர்ச் செய்கை சபை தீர்மானித்துள்ளது.

சந்தையில் தரம் குறைந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தியைத் தடுப்பதே, இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என, தென்னைப் பயிர்ச் செய்கை சபை அறிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் இது தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வருவது குறித்து. தற்போது துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் கபில யகந்தாவல தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, ஒக்டோபர் மாதத்திற்குள், இச்சட்டத்தைக் கடுமையாக்க எதிர்பார்த்துள்ளதுடன், இச்சட்டம் தொடர்பில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் விரைவில் தெளிவுபடுத்தப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான அடையாள அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

இவ் வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களில் 80 வீதமானோருக்கு, தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.இதுவரை கிடைத்த விண்ணங்களுக்கு அமைய, விநியோகிக்கப்படாத அடையாள அட்டைகள் இம்மாத இறுதிக்குள் விநியோகிகப்படும் என, திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணத்திலக்க தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள சுமார் மூன்று இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், அடையாள அட்டைகளுக்கு இதுவரை விண்ணப்பிக்காத பரீட்சார்த்திகள் FIS உடனடியாக விண்ணப்பிக்குமாறும், ஆட்பதிவுத் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, 2018 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1510

Search for people, places and things

### நிரோஸ்

போன்ல நெட்டும் மனசுல லவ்வரும் இல்லாதவங்க



நைட்ல நல்லா தூங்குவாங்க...

### நீரஜா

கோபத்தினால் 10 நோய்கள் உண்டாகலாம்



ஒரு சிரிப்பினால் 100 நோய்கள் குறையும், கோபம் தவிர்

### நிரோசன்

கல்யாணம் பண்ணினா உடனே உங்க தோஷம் போயிடும்.... அது என்ன தோஷம்?



வேற ஒண்ணும் இல்லைங்க! உங்க சந்தோஷம்தாங்க

### நீலிமா

வேலை பார்க்குறதில பாதி வாழ்க்கை போயிடுது



வேலை முடிஞ்சு வீட்டுக்கு வர்றதுல மீதி வாழ்க்கை போயிடுது

### நீது சந்திரா

குருவியை அழிக்க முடிந்த விஞ்ஞானத்தால்



நுளம்பை ஒழிக்க முடியவில்லை...

### நிகிலா

வோக்கிங் போறது எளிதானதுதான்...



வோக்கிங் போக எழும்புவதுதான் கஷ்டமானது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. இவ் அலங்கார உற்சவத்தில் ஆறாம் நாளான எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பாம்புத் திருவிழாவும் ஏழாம் நாளான எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பல் திருவிழாவும் 8ஆம் நாளான 26 ஆம் திகதி புதன்கிழமை வேட்டை திருவிழாவும் 9ஆம் நாளான 27 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் 10ஆம் நாளான 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும் 11 ஆம் நாளான 29 ஆம் திகதி சனிக்கிழமை கேணித்தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (படங்கள்:- பொ.சோபிகா)

# விசேட வகைப்படுத்தலுக்குள்ளடங்கும் பெண்கள் தொடர்பான ஆய்வறிக்கை விரைவில் வெளியாகும்

## வடக்கு சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள விசேட தேவையுடையோர் மற்றும் விசேட வகைப்படுத்தலுக்குள்ளடங்கும் பெண்கள் தொடர்பான தகவல்களை திரட்டும் ஆய்வு கணக்கெடுப்பின் முடிவுகள் தொடர்பாக அண்மைக்காலத்தில் சில வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட செய்திகள் தொடர்பாக இந்த ஆய்வினை மேற்கொள்ளும் அமைச்சு என்ற வகையில் எமது கருத்தை வெளியிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆய்வு நடத்துகின்ற அமைச்சுடன் எவ்வித தொடர்பாடலையும் மேற்கொள்ளாது அத்தகைய செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலப் போரின் பின்னர் வட மாகாணத்தில் வாழும் மக்களில் பலர் பல்வேறு வகைப்பட்ட சமூகப் பிரச்சினைகளுடனும் மாற்றுவலுவுடையோர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் நலன்கள் மற்றும் தேவைகளை கண்டறிவதும் பேணுவதும் சமூகத்தினதும் அரசினதும் பொறுப்பாகும்.

இந்த வகையில் வட மாகாணத்திலுள்ள விசேட தேவையுடையோர் மற்றும் விசேட வகைப்படுத்தலுக்குள்ளடங்கும் பெண்கள் தொடர்பான தகவல்களை திரட்டும் நோக்குடன் 2015 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் அனுமதித்த கருத்திட்டத்தின்படி வட மாகாண சுகாதார அமைச்சினால் இந்த ஆய்வானது முன்னெடுக்கப்பட்டது.

திறனாற்றல் குறைபாட்டின் வகைகளை இனங்காணல், விசேட தேவையுடையோர் மற்றும் விசேட வகைக்குட்படுத்தப்படக்கூடிய பெண்களின் நிலைகளை கண்டறிதல், இவர்களின் தேவைகளை அவர்கள் சார்பில் புரிந்து கொள்ளல், இவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் காணப்படும் இடைவெளிகளை இனங்காணல், இவர்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி விரிவான மற்றும் ஒருங்கிணைந்த சேவை வழங்கலை திட்டமிடுதல் என்பன இந்த ஆய்வின் குறிக்கோள்களாகும்.

ஆரம்பத்தில் அச்சிடப்பட்ட வினாக்கொத்தின் மூலம் தகவல் சேகரிக்கப்பட்ட போதிலும் ஆசிய மன்றத்தின் உதவியுடன் தகவல் சேகரிப்பானது கணிப்பலகையின் (Tablet Pc) மூலம் பெறப்பட்டு இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெறப்படும் தகவல்கள் உடனுக்குடன் ஆய்விற்குட்படுத்தக் கூடியதாகவுள்ளது.

இந்த ஆய்வானது இரு கட்டங்களை கொண்டதாகும். முதற் கட்டத்தில் விசேட தேவையுடையோர் அடையாளம் காணப்படுகின்றனர். இதற்கான தகவல் சேகரிப்பானது சுகாதார திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் சுமார் 350 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதலாம் கட்டத்தில் அடையாளங் காணப்பட்ட விசேட தேவையுடையோரின் திறனாற்றல் குறைபாடுகள் இரண்டாம் கட்டத்தில் மருத்துவ உத்தியோகத்தர்களின் உதவியுடன் உறுதிப்படுத்தப்படும்.

முதலாம் கட்ட ஆய்வானது கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரை பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாம் கட்ட ஆய்வின் தகவல்கள் கடந்த 2016.10.20 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் ஆரம்ப தகவல் திரட்டுக்களின் பகிர்வு நிகழ்வில் ஆர்வலர்களுக்கு பகிரப்பட்டன.

மேலும் தொடர்புடைய அமைச்சுக்களுக்கு அவர்கள் சம்பந்தப்படும் விடயங்கள் தொடர்பாக தகவல் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என அவ் அமைச்சுக்களுக்கும் எம்மால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே முதலாம் கட்டம் மட்டுமே நிறைவுற்ற நிலையில் அதன் முடிபுகள் எம்மால் வெளியிடப்பட்டிருந்த போதும் அது பற்றி அறிந்திராத முறையிலேயே மேற்படி செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

முதலாம் கட்ட ஆய்வினை வட மாகாணத்தில் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இரண்டாம் கட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் மேற் கொள்வதற்கு நிதிப்பற்றாக்குறை பெரும் சவாலாகவிருந்து ஆய்வு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்து நிதி வழங்கலை மேற்கொள்வதற்கு அண்மையில் மாகாண திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற அனுமதிக்கமைவாக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தகவல் சேகரிப்பு பணிகள் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களால் அவர் தம் வழமையான கடமைகளுக்கப்பால் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் ஆய்வினை நிறைவு செய்வதில் தாமதம் நிலவி வருகின்றது.

எவ்வாறாயினும் இவ்வாய்வானது வெகுவிரைவில் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்ட தகவல்களை பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பிள்ளையானின் வழக்கு விசாரணை

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு வாய் மூல சமர்ப்பணத்திற்காக எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலில் இருந்து வரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திர காந்தன் மீதான உண்மை விளம்பல் விசாரணைக்காக நேற்று முன்தினம் மட்டக்களப்பு மேல் நீதி மன்ற நீதிபதி எம்.வை. எம் இஷர்டீன் முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதவான் நீதிமன்ற பதிவாளர்கள் இருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் வழக்கு எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்காக பிள்ளையான் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்று அழைத்து வரப் பட்டார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன்,

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்ப டும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகி யோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரான ஜோசப் பர ராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் பிறப்பு நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது தேவாலயத்திற்குள்ளேயே வைத்து அடையாளந் தெரியாத துப்பாக்கி தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பாராளுமன்றுக்கு விஜயம்



(கொழும்பு)

சர்வதேச மதிப்பீட்டு மாநாட்டிற்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்தபோது பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க, பிரதிநிதிகளை வரவேற்பதை படத்தில் காணலாம். (இ-7)

## கரவெட்டி மத்தியஸ்தசபை நாளை

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கரவெட்டி மத்திஸ்தசபை வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா காரணமாக நடைபெறமாட்டாது. பதிலாக அன்றைய தின பிணக்குகள் நர்ளை 22.09.2018 சனிக்கிழமை நடைபெறும் என தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (இ-7)

## சேவைநலன் பாராட்டு- மணிவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐயாத்துரை செல்வராசாவின் சேவைநலன் பாராட்டு மற்றும் மணிவிழா யாழ் .கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.புற்றளை மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் ஆறுமுகம் சிவநாதன் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## உலக மருந்தாளர்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக மருந்தாளர்கள் தினம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் இடம் பெறவுள்ளது. (இ-7)

## மாதாந்த திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யரழ்.பொது நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தத் திரையிடல் -17 ரொறொன்ரோ உலகத் திரைப்பட விழாவில் விருதுவென்ற சொரயாவுக்குக் கல்லெறிதல் எனும் திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ-7)

## ஹிஸ்புல்லாவுக்கும் மகனுக்கும் பிணை

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் அவரது மகன் ஆகியோரை பிணையில் செல்ல வாழைச்சேனை நீதவான் எம். ரிஸ்வான் உத்தர விட்டுள்ளார்.

சவுதி அரேபிய அரசின் நிதியுதவியின் கீழ், மட்டக்களப்பு பல்கலைக்கழக நிர்மாணப் பணிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் 94 மில்லியன் ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் பொருட்களைக் கடத்தியதுடன், அந்தப் பொருட்கள் குறித்து நம்பிக்கையற்ற தகவல்களை வெளிப்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.


இந்நிலையில் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே நீதவான் அவர்களுக்கு பிணை வழங்கியுள்ளார்.

லங்கா பில்டர்ஸ் கோப்பரடிவ் சொஸைட்டி என்ற நிறுவனத்தின் தலைவர் பிரபாத் உக்வத்த பொலிஸ்மா அதிபருடாக கடந்த ஜனவரி மாதம் குற்ற விசாரணை திணைக்களத்தில் செய்த முறைபாட்டுக்கு அமைய, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். ஹிஸ்புல்லாவையும் மற்றும் அவரது மகனையும் உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வாழைச்சேனை நீதவான் எம். ரிஸ்வான் உத்தரவிட்டமைக்கு அமைவாக அவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## திருந்திய திருடன்



முன்னொரு காலத்தில் திருடன் ஒருவன் இருந்தான். தன் மகன் ராசப்பாவையும் திருட்டுத் தொழிலில் வல்லவனாக வளர்த்தான். திருடன் இறக்கும் நேரம் வந்தது.

"மகனே! நீ திருட்டுத் தொழிலில் மேலும் மேலும் வல்லவனாக வேண்டும். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொள்.

எங்கேனும் பக்திச்சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள் நடந்தால் அங்கு போகாதே. நீ அங்கே இருக்க வேண்டிய சூழ்நிலை வந்தால் ஏதும் காதில் விழாதபடி உன் காதுகளைப் பஞ்சுகளால் அடைத்துக் கொள். இல்லையெனில் அந்த நல்ல வார்த்தைகள் உன் மனதை மாற்றமடையச் செய்து விடும்." என்றான்.

"அப்படியே செய்கிறேன்," என்றான் மகன்.

தந்தையின் அறிவுரைப்படியே நடந்து வந்தான் ராசப்பா.

ஒரு முறை திருடிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தான். ஓரிடத்தில் மக்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டான். என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக அருகில் சென்றான்.

அங்கே மகாவீரர், ஒரு மேடையில் அமர்ந்து மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார். தன் தந்தை சொன்னது உடனே நினைவுக்கு வந்தது. தன் இருகைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து நடக்கத்தொடங்கினான்.

அப்பொழுது முள் ஒன்று அவன் காலில் தைத்தது. குனிந்த அவன் தன் ஒரு கையால் முள்ளைப் பிடுங்கிவிட்டு மீண்டும் காதைப் பொத்திக் கொண்டான்.

"தேவர்களுக்கு நிழல் விழாது. அவர்கள் கால்கள் நிலத்தில் படியாது," என்று மகாவீரர் பேசியது அவன் செவியில் விழுந்தது.

சில நாட்களில் முக்கிய திருட்டு ஒன்றைச்செய்த போது வீரர்களிடம் சிக்கிக்கொண்டான். அவன் செய்த திருட்டை எல்லாம் அறிய வீரர்கள் அவனைஅடித்துத் துன்புறுத்தினர். கல்லுளி மங்கனான அவனோ வாய் திறக்கவே இல்லை. அவனிடம் இருந்து உண்மையை அறிய அதிகாரிகள் சூழ்ச்சி செய்தனர்.

மயக்க மருந்து தந்து அவர்கள் அவனை ஓர் அழகான பூஞ்சோலையில் கிடத்தினர். பல அழகான பெண்கள்அவனைச் சூழ்ந்து நின்றனர். மயக்கம் தெளிந்த ராசப்பா தான் இருந்த இனிய சூழலைப் பார்த்து வியப்பு அடைந்தான்.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று அந்தப் பெண்களைக் கேட்டான்.

அவர்களில் ஒருத்தி, "நீங்கள் இப்பொழுது தேவலோகத்தில் இருக்கிறீர்கள். இங்கே நீங்கள் என்ன நினைத்தாலும் உடனே நிறைவேறும். நீங்கள் எங்களைப் போல மகிழ்ச்சியாக இருக்கலாம்.

நாங்கள் தேவலோகப் பெண்கள். இங்கே யாரும் பொய் சொல்லக் கூடாது.

பொய் சொன்னால் உடனே இந்த உலகத்தைவிட்டுப் போய் விடுவர். நீங்கள் யார்? பூவுலகில் என்னென்ன செய்தீர்கள்? சொல்லுங்கள்," என்று இனிமையாகக் கேட்டாள்.

உடனே ராசப்பா அந்தப் பெண்களைப் பார்த்தான். அவர்கள் கால்கள் தரையில் இருப்பதையும் நிழல் விழுவதையும் பார்த்தான்.

மகாவீரர் சொன்னதைக் கேட்டது அவன் நினைவுக்கு வந்தது. "இவர்கள் தேவர்கள் அல்லர் மனிதப் பெண்கள் தான். என்னை ஏமாற்ற முயற்சி செய்கின்றனர்' என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது.

"ஆ! மகாவீரர் பேசியதைச் சிறிது நேரம் கேட்டதாலேயே இவர்கள் என்னை ஏமாற்றுவதைக் கண்டுபிடிக்க முடிந்ததே! அவர் பேசுவதை நான் முழுமையாகக் கேட்டிருந்தால் எத்தனை நன்மைகள் உண்டாகியிருக்கும்' என்று நினைத்து உள்ளம் கலங்கினான்.

அவர்களைப்பார்த்து, "நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள். இது சொர்க்கம் அல்ல நீங்களும் தேவர் உலகப் பெண்கள் அல்ல.

எனக்கு மட்டும் விடுதலை கிடைத்தால் நான் திருட்டுத் தொழிலையே செய்யமாட்டேன். மகாவீரரின் சீடனாகி அவர் அருளுரைகளை எப்பொழுதும் கேட்டு கொண்டு அவர் திருவடிகளில் விழுந்து கிடப்பேன்," என்று உணர்ச்சியுடன் சொன்னான்.

இவனது பேச்சு அரசனின் காதுகளில் விழுந்தது. ராசப்பாவை அழைத்து விசாரித்தான் அரசன். நடந்த நிகழ்ச்சிகளை அறிந்த அரசன் அவனை விடுதலை செய்தான். அவ்னும் திருட்டுத் தொழிலைவிட்டு விட்டு மகாவீரரின் சீடர்களில் ஒருவன் ஆனான்.

## நற்சிந்தனைகள்

- வேகமாக ஓடுவோர் ஒரு கட்டத்தில் களைத்து நின்றுவிட வேண்டி வரும். சாவகாசம், நிதானம் என்பதே களைப்பின்றி பயணிக்க ஏற்ற மருந்தாகும்.
- ரிஸ்க் எடுப்பது அவசியம், அதை குழந்தைகளின் சிறிய நடை போல சிறிது சிறிதாக பிரித்து எடுத்தால் பாரம் தெரியாமலே இலக்கை அடைந்துவிடலாம்.
- எல்லாவித மகிழ்வுகளையும் இழந்து தலைமைப் பதவியை அடைந்த ஒருவர் தனது வெற்றி கூட தவறான பாதையில் சென்று விட்டதைக் கண்டு கொண்டார்.
- வெற்றி என்பது ஒரு தொடர் நடவடிக்கை, அது ஓர் உணர்வு. நான் யார் என்னவாக இருக்கிறேன், எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறேன், என்பதுபற்றி நமக்குள்ளே ஜொலிக்கும் இதமான உணர்வுதான் வெற்றி !
- அன்றாட வாழ்க்கையில் மூழ்கிப் போவதால் கனவுகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறோம். ஒரு கட்டத்தில் இலட்சியத்தையே மறந்துவிடுகிறோம். ஆகவேதான் நேரத்தை நழுவ விட்டு விடக் கூடாது.
- இதுவரை நீங்கள் பெற்றிருப்பதற்காக செலுத்தும் நன்றிகள் அந்த நன்மைகளை தொடர்ந்து பெருகச் செய்யும்.
- பணப்பற்றாக்குறை இருக்கிறது என்ற எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுங்கள். என்வாழ்வில் ஏராளமாக பணம் சேர்கிறது என்ற எண்ணத்தை மனதிற்கு வழங்கி அமைதி காணுங்கள். பின்னர் அவதானியுங்கள் வளங்கள் பெருகியிருக்கக் காண்பீர்கள்.
- தாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேலை, பரவசமானதாகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் அமையப் பெற்றவர்கள் மிகவும் சந்தோசமானவர்கள்.
- பிரச்சினையில் கவனம் செலுத்துகிறோமா அல்லது தீர்வில் கவனம் செலுத்துகிறோமா என்பதை யோசித்து நடக்க வேண்டும்.
- ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு 25 விதமான வழி முறைகள் உள்ளன. எனவேதான் உங்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பல்வேறு விதமான வழிகளை தேடுவதில் நாட்டம் காணுங்கள்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.09
21

- 1938-நியூயோர்க்கின் லோங் தீவில் சூறாவளி காரணமாக 500 முதல் 700 வரையானோர் கொல்லப்பட்டனர்.
- 1989-இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1990-மட்டக்களப்பு ஆரையம்பதியில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் 17 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1995-விநாயகரின் சிலைகள் பால் குடிப்பதாக வதந்தி பரப்பப்பட்டது.

### பிறப்புகள்

- 1853-ஹெய்க் காமர்லிங் ஆன்ஸ், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர் (இ. 1926)
- 1910-எம்.டி.பார்த்தசாரதி, தமிழக கர்நாடக இசைக் கலைஞர், திரைப்பட இசையமைப்பாளர்(இ. 1963)
- 1921-சரோஜினி வரதப்பன், தமிழக சமூக செயற்பாட்டாளர் (இ. 2013)
- 1924-தமிழ்ஒளி, புதுவைக் கவிஞர் (இ. 1965)
- 1930-எஸ்.ஏ.கணேசன், தமிழக அரசியல்வாதி
- 1931-சிங்கீதம் சீனிவாசராவ், தென்னிந்திய சினிமா படஇயக்குநர்
- 1934-தாவீது தூலீசு, நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர்
- 1963-ஜீவா, இந்தியத் திரைப்பட ஒளிப்பதிவாளர், இயக்குநர் (இ. 2007)
- 1965-பிரமிளா செயபால், இந்திய-அமெரிக்க அரசியல்வாதி
- 1980-கரீனா கபூர், இந்திய நடிகை

### இறப்புகள்

- 1958-பி.எஸ்.பாலிகா, இந்திய எழுத்தாளர், பதிப்பாளர் (பி. 1908)
- 1967-அல்பிரட் பீரிசு, இலங்கை அரசியல்வாதி (பி. 1905)
- 1971-பேர்னார்டோ ஊசே, நோபல் பரிசு பெற்ற அர்க்கெந்தீன மருத்துவர் (பி. 1887)
- 1989-ராஜினி திரணகம, இலங்கை மனித உரிமை மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர் (பி.1954)
- 2005-காரை சுந்தரம்பிள்ளை, ஈழத்துக் கவிஞர், எழுத்தாளர் (பி. 1938)
- 2007-விஜயன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 2008-டி.பி.விஜயதுங்கா, இலங்கையின் 4 ஆவது ஜனாதிபதி (பி. 1922)
- 2011-ஜோ அபேவிக்கிரம, சிங்களத் திரைப்பட நடிகர் (பி. 1927)

### சிறப்பு நாள்

- சம இரவு நாள் (வடக்கு அரைக்கோளம்)
- உலக அமைதி நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 75 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 120 | 60 |
| தக்காளி | 40 | 20 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 50 | 30 |
| கோவா | 130 | 50 | 120 | 140 |
| கரட் | 150 | 140 | 240 | 160 |
| பூசணி | 50 | 35 | 60 | 40 |
| புடோல் | 60 | 30 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 50 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 90 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 35 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 80 | 100 |
| பயற்றங்காய் | 50 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 70 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 55 | 80 | 50 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 75 | 80 | 80 |
| போஞ்சி | 140 | 120 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 100 | 50 |
| கீரை-1பிடி | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 150 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 30-50 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 80 | 160 | 100 |
| முள்ளங்கி | 60 | 20 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 110 | 80 | 30 |

சொல் எதுவும் பேசாததை அறமும், உண்மையான குணநலன்களும் தாமே பேசும்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இதய சுத்தியோடு இனத்துக்கு உதவுங்கள்

உலகம் போற்றுகின்ற தலைவர்கள், ஆத்ம ஞானிகள், சமூக சேவையாளர்கள் என அனைவரிடமும் இருந்த ஒரே இயல்பு இதய சுத்தியோடு கூடிய பணியாகும்.

மனித வாழ்வில் இதய சுத்தி, மனத் தூய்மை என்பன மிகவும் முக்கியமானவை.

அதிலும் பொதுச்சேவை என்ற விடயத்தில் இதய சுத்தி மிகவும் அவசியமானது.

எனினும் இன்றைய யதார்த்த சூழ்நிலையில், நாம் சந்திக்கின்ற இடமெங்கிலும் சுய நலனும் சொந்த வாழ்வும் மட்டுமே எழுகை பெற்றுள்ளதைக் காணமுடியும்.

இதனாலேயே,

*ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்...*

என இராமலிங்க வள்ளலார் பாடினார்.

ஆக, இதயசுத்தியுடன் கூடிய சேவை எல்லோரிடமும் இருக்காவிடினும் ஒரு குறிப்பிட்ட பகுதியினரிடமாவது நேர்மை, நீதி, நியாயம் என்பன இருப்பது அவசியமாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக எங்கள் அரசியல் புலத்தில் எங்களை விற்று தங்களின் சீவியம் நடத்துகின்ற அரசியல்வாதிகளே நமக்குக் கிடைத்துள்ளனர்.

மாறாக ஒரு சிலர் இத்தகைய வஞ்சகத்தனத்தை முறியடித்து தமிழ் இனம் வாழ்வதற்காக குரல் கொடுத்ததால், சம்பந்தப்பட்டவருக்குச் சொல்லொணாத் துன்பங்களைக் கொடுத்து அவர்களை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து எப்படியும் வெளியேற்றிவிட வேண்டுமென நினைக்கின்ற கயமைத்தனங்கள் போதுமென்றாயிற்று.

தாங்கள் வாழவேண்டும் தங்களுக்கே பதவி வேண்டும் என்பதற்காக; யார் யாரெல்லாம் தங்களுக்கு உடன்பாடில்லாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கு எப்படியும் அநீதி இழைக்க வேண்டும் எனப் பாடுபடுகின்றவர்களைப் பார்க்கும்போது ஒன்பதே ஆண்டுகளுக்குள் இப்படியொரு நரிக் கூட்டம் நம் மத்தியில் இருந்ததா என்று எண்ணத்தோன்றும்.

ஓ! இறைவா! தன் இனம் வாழவேண்டும் என்பதற்காக பெற்ற தாயை, தந்தையை, சகோதரர்களை விட்டுவிட்டு தங்களை ஆகுதியாக்கிய பல்லாயிரக்கணக்கான இளவல்கள் பிறந்து வளர்ந்து தியாகத்தை விளைவித்த இந்த மண்ணில் இப்படியொரு நிலைமையா என்று நினைத்துப் பார்க்க முடியாத அளவில் நிலைமை ஆகிவிட்டது.

பரவாயில்லை என்று விட்டால் தியாகத்தைக்கூட விற்றுப் பிழைக்குமளவில் நாங்கள் சின்னத்தனமாகிவிட்டோம் எனும்போதுதான் நெஞ்சம் கருகிப் போகிறது.

# எந்தப் பிரச்சினைக்கும் ஐ.தே.க.தலைமை தீர்க்கமான முடிவை எடுத்ததில்லை

## அசாத் சாலி சீற்றம்

(கொழும்பு)

நாட்டில் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம், ஆணைக்குழு அல்லது செயற்குழுவை அமைத்து வருகின்றதே அன்றி எந்தவொரு தீர்க்கமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி குற்றம் சாட்டினார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தவகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை, பிணை முறி விவகாரம் தொடர்பில் ஆணைக்குழு ஒன்றினை கொண்டுவந்து விசாரித்தது.

அதனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு அவர்கள் தங்களுக்கு தேவையானவர்களையே அந்த குழுவில் நியமித்து காப்பாற்றிக் கொள்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய மாற்றம் வேண்டும். தலைமை மாற வேண்டும் என அக்கட்சியின் உறுப்பினர்கள் கோஷமிட்டனர். ஆனால் அக்கட்சியில் தலைமைக்கு ஏற்றவகையில் சகாக்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 2030இல்தான் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்படும் என தெரிந்தும் அவர்கள், நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது நாடாளுமன்றம் வரை நடந்துவந்து மாற்றுக் கருத்தில்லாமல் அவருக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக தெரிவித்தனர்.

ஆனால் இறுதியில் அவர்கள் எல்லோரும் காணாமல் போய்விட்டார்கள். அவ்வாறு கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியினர் அதற்கு பின்னர் வாய் திறக்கவில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில ஊர்காவற்றுறை, கரம்பன், மெலிஞ்சி முனை, நாரந்தனை, ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், காங்கன்குளம், செடடிக்குளம், அரசடிக் குளம், காந்திநகர், புளியங்குளம், நேரியகுளம், இலுப்பைக் குளம், சின்னகுளம் நேரியகுளம், அழகாபுரி, துட்டுவாகை, தந்திரிமலை, சின்னசிப்பிக்குளம், கப்பாச்சி, முதலியார்குளம், முகத்தான்குளம், முகத்தான்குளம் 1வது பண்ணை, கஜசிங்கபுர இராணுவ முகாம், செட்டிக்குளம் பலநோக்கு கூட்டுறவு, செட்டிக்குளம் தொலைத்தொடர்பு, செட்டிக்குளம் வைததியசாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளம் ஒருபகுதி பெரியகுஞ்சுக்குளம், மாதர் கிராமம், பெரியமுறிப்பு, தேக்கம் மடுசந்தி, கட்டையடம்பன், மாலவராயர் கட்டையடம்பன், தம்பானிக்குளம், பன்னிவெட்டுவான், தொழில்நுட்பக்கல்லூரி பன்னி வெட்டுவான், இசை மலைத்தாழ்வு கற்கடந்தகு ளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன விதை பண்ணை, தேக்கம் நானாட்டான் பிரதேசசபை, முருங்கனிலிருந்து தலை மன்னார் வரை, கமலாம் பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மனனார் நீர்ப்பாச னத்திணைக்களம், மன்னாா தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிறசாலை, எருக்கலம்பிட்டி பம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழி ற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் இராணுவ முகாம், தள்ளாடி டயலொக் கோபுரம், தள்ளாடி இராணுவ முகாம், பேசாலை Palmyrah house, மன்னாா அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# விண்ணப்பப்படிவங்கள் விநியோகம்

கரவெட்டி மத்தி கமக்காரர் அமைப்பால் 2018/2019 ஆண்டுக்கான நெல் மானிய பசளைக்கான விண்ணப்பப்படிவங்கள் நாளை 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் விநியோகிக்கப்படும்.

சுற்றுநிருபத்தின் பிரகாரம் புதுக்குளம் வாய்க்கால் வேலைத்திட்டத்தில் பங்குபற்றும் விவசாயிகளுக்கு மட்டுமே இந்த விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.

எனவே குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க மண்வெட்டி, குப்பைவாரி, கத்தி, வெற்று உரைப்பை ஆகியவற்றுடன் விவசாயிகளை புதுக்குளம் வாய்க்கால் பகுதிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

பிள்ளையார் முன் பயபக்தி விசுவாசத்துடன் குட்டிக் கொண்டு நன்றாக உட்கார்ந்து எழுந்து மூன்றுமுறை தோப்புக்கரணம் போடவேண்டும். இதனால் அறிவும் ஆக்கையும் நலம் பெறும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மகாலட்சுமியை வழிபடுபவர்களுக்கு கிடைக்கும் பதினைந்து பேறுகள்!

வறுமையில் உள்ளவர்களுக்கு வறுமை இல்லாத நிலை மாறும.

பெரிய பெரிய மகான்களின் ஆசி கிடைக்கும்.

விட்டில் உள்ள தானியங்கள் அதிகமாக பெருகி தானிய விருத்தி ஏற்படும்.

பிறரிடம் பேசும் போது பேச்சில் வாக்கு சாதுரியம் உண்டாகும்.


தொடர்ந்து வம்சவழியான வம்ச விருத்தி ஏற்படும்.

பணிகளில் உள்ளவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும்.

நீண்ட நாட்களான புதியதாக வாகனம் வாங்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு வாகன வசதிகள் அமையும்.

அரசியலில உளளவரகளுகக ஆடசிப பொறுபபேறகும் யோகம் கிடைக்கும்.

புதிதாக தொழில் செய்ய நினைப்பவர்களுக்கு பல்வேறு வகையான ஞானங்கள் ஏற்படும்.(முற்றும)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பாடுவதன் மகத்துவம்

நீங்கள் பஜனைப் பாடல்கள் பாடும்போது ஒலி ஆற்றலின் அதிர்வுகள், உங்களுடைய உடலின் ஒவ்வொரு அணுவினாலும் கிரகிக்கப்படுகின்றன. இது உங்களிடமுளள ஆறறலைத தூணடுகிறது. மெயயறிவை (Conscionsrees) உயர்த்துகிறது. உங்களுடைய உடல் முழுவதும் ஆற்றலில் ஊறித் திளைக்கிறது. பெரும் மாற்றம் நிகழ்கிறது.

ஒரு மைக்ரோபோன் ஒலியைக் கிரகித்து அதை மினசாரமாக மாறறுகிறது. உடல ஒலி அதிாவுகளைக கிரகித்து அதை மெய்யறிவாக மாற்றுகிறது.

வீணான வம்புப் பேச்சுக்களையோ அல்லது மிக சப்தமான நாராசமான இசையையோ நீ உட்கார்ந்து கேட்டால் அந்த ஆற்றல் உன்னுடைய உடலில் கிரகிக்கப்படுகிறது. ஆனால நலல உணாவைக கொடுபபதிலலை.

முழு மனதோடு ஞானம் அல்லது பாடல்களைக் கேட்கும் போது, அது உன்னுடைய மெய்யறிவை உயர்த்துகிறது.

முனிவர்கள் மற்றும் ஞானிகளுடைய சொற்கள், உடனடியாக அனுபவமாக வடிவெடுக்கிறது என்று வடமொழியில் மிகப்பழைமையான பழமொழி உள்ளது.

பாவா: நாஙகள படிததும பலரிடமிருநது கேடடும இருக்கிறோம். ஆனால் அதே ஞானம் பற்றி குருஜி பேசும்போது அது நேராக நம் உள்ளத்தைத் தொடுகிறது.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### கருணை கொள் மனமே!

✦ கஞ்சத்தனத்தைப் பற்றிப் பயந்து கொள்ளுங்கள். ஏனெனறால உஙகள முனனோரகள கஞ்சததனததின காரணமாகத்தான் அழிந்து போனார்கள்.

✦ ஒருவர் தருமம் செய்கிறாரென்றால் அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட நல்லெண்ணத்தின் காரணமேயாகும.

✦ ஒருவர் தருமம் செய்வதில் கஞ்சத்தனம் செய்கிறார்என்றால் அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட நம்பிக்கை கொள்ளாத தவறான எண்ணத்தின் காரணமேயாகும்.

✦ தருமம கொடுபபதினால இருககும செலவம அழிந்து போவதில்லை.

✦ கருணை உள்ளம் கொண்டவன் தங்கும் இடம் சொர்க்கமாகும்.

✦ அநாதை பிள்ளைகளின் தலையை இரக்கத்துடன் தடவுங்கள. ஏழை எளியவரகளுககு உணவு கொடுங்கள.

# தேசிய மட்ட உதைபந்தாட்டம் மகாஜனக் கல்லூரி அணி மகுடம்



தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுப்பிரிவு கால்பந்தாட்டப் போட்டியில், கொழும்பு கந்தானை டி மெசனோல்ட் வித்தியாயத்தை வீழ்த்தி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி சம்பியனாகியது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி, 18 ஆம் திகதி நடைபெற்ற காலிறுதியாட்டத்தில், கண்டி மாவநெல்ல படுரியா முஸ்லிம் மகா வித்தியாலய அணியை 03:00 என்ற கோல் கணக்கிலும், தொடர்ந்து அன்றைய தினம் நடைபெற்ற அரையிறுதியில் திருகோணமலை கிண்ணியா மத்திய கல்லூரியை, சமநிலை தவிர்ப்பு உதையில் 04:02 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்திருந்தது.

அநுராதபுர சிறைச்சாலை மைதானத்தில் கடந்த 19 ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு கந்தானை டிமெசனோல்ட் வித்தியாலய அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. தொடர்ந்து சம்பியனைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. இதில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

மகாஜனா கல்லூரியின் அணித்தலைவர் வ.ஜக்சன் இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும், உபதலைவர் ச.கஜனுஜன் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில், 1978 ஆம் ஆண்டு சிங்கர் வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்றிருந்த நிலையில், 40 ஆண்டுகள் கழித்து தற்போது, தேசிய மட்ட வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மகாஜனக் கல்லூரி அணியின் பொறுப்பாசிரியராக இ.திலீபன், பயிற்றுவிப்பாளர்களாக து.மோகனதாஸ், ச.செந்தூரன், மேலதிக பயிற்றுவிப்பாளர்களாக ச.ஜபாகர், தி.புருசோத்தமன் ஆகியோரும் கடமையாற்றியிருந்தனர்.

மேலும், மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஆடியிருந்த, இளவாலை யங் ஹென்றிஸ் அணி தோல்வியடைந்து, நான்காமிடத்தைப் பெற்றுக்கொண்டமையும்குறிப்பிடத்தக்கது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தது ஊரெழு றோயல்





அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்திவருகின்றது.

தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியின், இரண்டாம் சுற்று ஆட்டங்கள் கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகியது. இரண்டாவது சுற்றின் முதல் போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து முல்லை சுப்பராங் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. இதன்மூலம் மூன்றாவது சுற்று ஆட்டத்துக்கு ஊரெழு றோயல் அணி உள்நுழைந்துள்ளது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் அணியின் கபில் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் மாபெரும் தாச்சிப் போட்டி முடிவுகள்

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தென்மராட்சி ரீதியில் நடைபெற்று வரும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கைதடி மத்தி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி A விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் நாவற்குழி சரஸ்வதி A விளையாட்டுக்கழகம் 14:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி அரையிறுதிக்கு தெரிவாகியது. இதே வேளை இன்றையதினம் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு A பிரிவிற்குரிய அரையிறுதிப் போட்டியில் கைதடி தெற்கு மின்னொளி A விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி A விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# மன்னார் கில்லறியை வீழ்த்திய றேஞ்சர்ஸ்





அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதியது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் மாதுஜன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# 1வது காலிறுதிப்போட்டியில் சிவானந்தாவை வீழ்த்தியது ஆவரங்கால் இந்து!

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் அமரர் சிவகுருநாதர் ஞாபகார்த்தமாகவும் நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டி இளவாலை மத்தி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் கூவில் சிவானந்தா எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் மோதியது. 5 சுற்றுகளைக் கொண்ட போட்டியில் முதலிரு சுற்றுக்களையும் சிவானந்தா தனதாக்கியபோதும் இறுதி 3 சுற்றுக்களை இந்து இளைஞர் தனதாக்கி அரையிறுதிக்குள் நுழைந்தது. (க)

# துறையூர் ஐயனார் அணி வெற்றி



அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் வேலணை துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. தொடர்ந்து, வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில், துறையூர் ஐயனார் அணி, 06:05 என்ற கோல் கணக்கில் வென்றது. (க-26)

# ஜெயரூபன் சிறப்பாட்டம் கே.சி.சி.சி அணி வெற்றி

ஏ.பி. விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

லீக் முறையில் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில், இரண்டாம் சுற்று ஆட்டங்கள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யூனியன்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆகீசன் 35, பிரசாந்தன் 30, சுயாந்தன் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கே.சி.சி.சி.சி அணி சார்பில் கஜானன், நிமலதாஸ் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, ஜெயரூபனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் உதவியுடன், 18.4 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஜெயரூபன் 90 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 40 ஓட்டங்களையும், பானுஜன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (க-26)

## யானை தாக்கியதில்...

னர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா, புளியங்குளம் பகுதியில் வசித்து வந்த ஆரோக்கியநாதன் ஞானசீலன் 50 வயதுடைய வயோதிபர் தனது சகோதரனின் விவசாயக்காணியில் கச்சான் பயிரிட்டு தோட்டம் செய்து வந்துள்ளார். நேற்று காலை அப்பகுதியில் தனது மாட்டைத்தேடி காட்டுக்குச் சென்றபோதே காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலையிலிருந்து நீண்டநேரமாக காணவில்லை என்று தெரிவித்து உறவினர்கள் நேற்று மாலை 3 மணியளவில் சேமமடுவில் தேடிச்சென்றபோது காட்டுப்பகுதி ஒன்றில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து ஓமந்தைப் பொலிஸார் மற்றும் கிராம அலுவலருக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்குச் சென்ற ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250,281)

## குற்றப் புலனாய்வு...

அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி காணாமல்போன பிரகீத் எக்னெலிகொட தொடர்பான விசாரணை இடம்பெற்று வருகின்ற நிலையில் இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் அரசியல் கைதி...

யுறுத்தி இரு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-9)

## பொருள் வாங்குவது...

பெற்றுள்ளது. மேற்படி பகுதியில் பெண்மணி ஒருவர் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரு கிறார்.

அங்கு நேற்று வியாழக்கிழமை மதியம் 1.00 மணியளவில் மோட்டூர் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் கடையில் பொருட்கள் வாங்குவது போல் பாசாங்கு செய்துவிட்டு பெண்மணியின் கழுத்தில் இருந்த சங்கிலியை இழுத்து அறுத்துள்ளார்.

சுதாகரித்துக் கொண்டு சங்கிலியை பிடித்துக் கொண்டு பெண்மணி போராடிய நிலையில் அதன் அரைவாசி பகுதியை மட்டும் திருடன் அறுத்துச் சென்றுள்ளான். (ம-60)

## கிளிநொச்சியில்...

வியாழக்கிழமை மாலை பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பயிர்ச் செய்கைக்காக தனியார் காணியை உழவு இயந்திரம்கொண்டு பண்படுத்தும் போதே இவை அடையாளம்காணப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் குறித்த வெடிபொருட்களை அகற்றியுள்ளனர். (ம)

## பெரும்பான்மை இனத்தை...

இவர்களை ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பலர் நேற்று சென்று பார்வையிட்டுள்ளனர்.

தம்மை அரசு குறுகிய புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்குகளை விரைவுபடுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உடல் நிலை மோசமடைந்த நிலையில் ஒரு வாரமாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் நேற்று அவர்களை பார்வையிட சென்ற சிங்கள மாணவர்கள் தாம் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு போராடுவோம் என்றும், அரசுக்கு இது தொடர்பில் எமது அழுத்தங்களை வழங்குவோம் என ஆதரவு தெரிவித்து சென்றுள்ளனர். (ம-9)

## போரில் பொது...

இலங்கை இராணுவத்தினர் மீது சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஐ.நா. மனித உரிமை பேரவை கைவிட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் ஐ.நாவின் நிலைப்பாடு என்ன என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கம் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள், உயிரிழப்புகள் தொடர்பில் தனது பொறுப்புக்கூறலில் இருந்து விலக முடியாது. சிறிசேன அரசாங்கம் இது தொடர்பான விடயத்தில் ஐ.நா.வுக்கு அளித்த வாக்குறுதிகளை காப்பாற்றும் என நம்புகிறோம் இவ் விடயமாக நாம் தொடர்ந்தும் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## அரசியல் கைதிகளை...

முதல்வர் விக்னேஸ்வரன் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இராணுவப் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக கட்டாயமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும் போது மேற்படி தமிழ்ச் சிறைக் கைதிகளைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தவே அவர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்காது தாமதிக்கின்றீர்களோ என்று எண்ண வேண்டியுள்ளது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தமான முன்னைய பல கடிதங்களின் தொடர்ச்சியாக இந்த அவசர கடிதத்தை உங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன். வடமாகாணத்திற்கு நீங்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பல தருணங்களில் (தமிழ்) அரசியல் கைதிகள் பற்றி உடனே நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்திருந்தீர்கள். வழக்குப் பதியப்படாமல் சிறையில் தொடர்ந்து விளக்கமறியலில் இருப்போர்க்கு எதிராக உடனே வழக்குகள் பதியப்படப்போவதாகவும் போதுமான சாட்சியங்கள் இல்லாதவரை உடனே விடுவிக்கப்போவதாகவும் நீங்கள் வாக்குறுதிகள் அளித்தும் அவை இற்றைவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது சம்பந்தமாக முன்னைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கும் அவரின் நேரடி உள்ளீட்டை வேண்டிக் கடிதம் எழுதியிருந்தேன். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் மற்றையோராலும் என்னாலும் இது சம்பந்தமாக இதுவரை எடுக்கப்பட்ட பிரயத்தனங்கள் எவையும் பயனளிக்கவில்லை. இதன் காரணத்தால்தான் அநுராதபுர அரசியல் சிறைக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட வேண்டி வந்துள்ளது.

கொழும்பு, பூசா போன்ற சிறைச் சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் இவ்வாறான கைதிகளும் மேற்படி போராட்டங்களில் ஈடுபடுவது பற்றிக் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

2018ம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உங்களின் செயலாளர் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் உங்களுக்கு அனுப்பப்பட்ட எனது கடிதத்தில் சட்டத்தரணிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் கைதிகள் சம்பந்தமான நீதிமன்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. வழக்கமாக நீதிமன்ற வழக்குகள் தாமதப்படுவது பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவை சம்பந்தமான உரிய நடவடிக்கைகள் நேரத்துக்கு எடுத்து சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படாமையாலேயே சிறைக் கைதிகள் உங்கள் வாக்குறுதிகளில் நம்பிக்கை இழந்து மேற்படி சாகும் வரை உண்ணாவிரத போராட்டங்களில் இறங்கியுள்ளார்கள் என்பது உங்களுக்கு இப்பொழுது தெரிந்திருக்கும். நாட்டில் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் உண்டுபண்ண நல்லாட்சி அரசாங்கம் மிகப்பெரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்று கூறப்படும் கூற்று மேற்படி அரசியல் சிறைக்கைதிகள் சம்பந்தமாக நீங்கள் காட்டும் தாமதத்தின் நிமித்தம் வெறும் கண்துடைப்போ என்று எண்ணவேண்டியுள்ளது.

இராணுவப் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக கட்டாயமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும் போது மேற்படி தமிழ்ச் சிறைக் கைதிகளைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தவே அவர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்காது தாமதிக்கின்றீர்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. என்றாலும் உங்கள் மீதான நம்பிக்கையை இன்னமும் நான் இழக்கவில்லை. நீங்கள் உங்கள் வாக்குறுதிகளை நிலைநாட்டுவீர்கள் என்று இன்னமும் நம்புகின்றேன்.

மிக உயர்ந்த அரசியல் மட்டத்தில் சம்பந்தப்பட்ட பல தரப்பாரின் கருத்துக்களை அறிந்து உடனேயே தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயமாகியுள்ளது. கருத்துக்களை அறிந்த பின் தமிழ் அரசியல் கைதிகளுக்கு உகந்த நிவாரணங்களை உடனேயே வழங்குவது உங்கள் தலையாய கடமை என்பதை உங்களுக்கு கூறி வைக்கின்றேன் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகளை தெரிந்து கொள்வதற்காக பிரதமர், சபாநாயகர், எதிர்க் கட்சித் தலைவர், முன்னைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-281)

## கசிப்பு தயாரித்தவர்...

யாழ்ப்பாணம், அராலிப்பகுதியில் கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் குடாக்கிரி பகுதியில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது 150 லீற்றர் கோடா மற்றும் 60 லீற்றர் கசிப்புடன், கசிப்பு காய்ச்சுவதற்கு தயாராக இருந்த உபகரணங்களும் வட்டுக் கோட்டை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம)

## வடக்கு அபிவிருத்தியில்..

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1947 முதல் ஆட்சியமைத்த அனைத்து அரசாங்கங்களும் தங்களது இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக மட்டுமே வடக்கு, கிழக்கு மக்களின் பிரதிநிதிகளை பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, அம்மக்களின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய அரசியல் பின்புலத்தை அமைக்கவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களின் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் அனைத்து அரசாங்கங்களும் குறைந்தளவு கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினைக்கு பல விடயங்கள் அடிப்படையாக இருந்தபோதிலும் தகுந்த அரசியல் தலைமை அப்பிரதேசங்களில் பிரதிபலிக்காதது முக்கிய காரணமாக அமைந்துள்ளதென்றும் தெரிவித்தார்.

ஒரு மாகாணத்தை, அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வதற்கு அம்மாகாணத்தில் குறைந்தபட்சம் ஒரு அமைச்சரவை அமைச்சுப் பதவியாவது வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை பிளவுபடுத்தாத அதிகார பகிர்வு எனப்படும் எண்ணக்கரு அப்போதே யதார்த்த மாகுமென்றும் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் அப்போதைய அரசாங்கத்தினால் சரிவர கடமைகளை நிறைவேற்றாததன் காரணமாகவே 2015 ஜனவரி 08 ஆம் திகதி நாட்டின் மக்கள் தன்னை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தார்கள் எனத் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த மூன்றரை வருடங்களாக அப்பணிகளை மேற்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தெரிவித்தார். யுத்தம் நிலவிய பிரதேசங்களில் மக்களிடையே நிலவும் அச்சத்தை தீர்க்கும் முகமாக இன, மத ரீதியான நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு அரசு பாரிய பங்காற்றியுள்ளதென்பதையும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். அதனூடாக மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, எவ்வாறான சவால்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்தாலும் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார். (ம)

## படையினரின் பாலியல்...

தேச அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாடு ஜெனிவாவில் நடைபெறுகின்ற நிலையில், குறித்த அமைப்பு இதுதொடர்பான அறிக்கை ஒன்றை மாநாட்டில் முன்வைத்திருக்கிறது.

யுத்த காலத்திலும், யுத்தத்துக்குப் பின்னரும் தமிழர்கள் பலர் பாதுகாப்பு தரப்பினரால் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனைகளில் இருந்து தப்பி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியிலும், தமிழர்களை இலக்கு வைத்து பாலியல் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

## மக்களின் காணி...

தர்ஸன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பலாலி இராணுவ தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தின் வசம் 25 ஆயிரத்து 986.67 ஏக்கர் நிலம் காணப்பட்டது. குறித்த நிலத்தில் 88.80 வீதமான நிலம் மக்களிடம் மீள வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றிடம் தற்போது மொத்தமாக 4512.82 ஏக்கர் நிலம் காணப்படு கின்றது. இது யாழ்.மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 1.39 வீதமாகும்.

இதேவேளை வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் மட்டும் பலாலி விமான நிலையம் மற்றும் விமானப்படையின் கீழ் உள்ள 996.74 ஏக்கர் நிலமும், இராணுவத்திடம் உள்ள 2032.19 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து 3028.93 ஏக்கர் நிலம் இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ளது.

இதேபோல் இராணுவத்தின் கீழ் உள்ள 500 ஏக்கர் நிலத்தை மக்களிடம் மீள கையளிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் மக்களுடைய நிலங்களை மக்களிடம் மீளவும் வழங்குவதில் இராணுவம் தெளிவாக உள்ளது. அதேசமயம் தேசிய பாதுகாப்பு மற்றும் மக்களுடைய பாதுகாப்பிலும் இராணுவம் கவனம் செலுத்தவேண்டிய கட்டாயம் உள்ளது. குறிப்பாக இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் சிறு வன்முறை குழுக்களால் மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுமா? என்பது குறித்தும் இராணுவம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

இதனடிப்படையில் மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல், தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் இல்லாமல், தொடர்ச்சியாக மக்களுடைய நிலங்களை இராணுவம் விடுவிக்கும். இதேபோல்

யாழ்.மாவட்டத்தில் பரவலாக உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். ஆனால் அவற்றை அகற்றி வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கான பணம் எமக்கு தேவையாக உள்ளது. அது குறித்து நாங்கள் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

அவர்களிடம் இருந்து எமக்கு தேவையான பணம் கிடைக்குமாக இருந்தால் மக்களு டைய காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

நீரோகா
திகதி 2018/09/20
சீட்டிழுப்பு இலக்கம் 449
லக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 06 14 66 68 50
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/09/20
சீட்டிழுப்பு இலக்கம் 3750
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 2 1 0 9 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.09.20
சீட்டிழுப்பு இலக்கம் 1888
ஆங்கில எழுத்து V
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 27 31 74
தேசிய லொத்தர் சபை

O/L உடன் 6 மாத பயிற்சிபெற்று

டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடாவில்

ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்

Tourism & **Hotel Management** 11வது அணி

ஹொட்டேல் பயிற்சிநெறி

**FREE** ENGLISH for COMMUNICATION
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் உத்தரவாதம்!

மேலதிக விபரங்களுக்கு
**0777 324 004**
077 36 16 798
021 221 9 221

ஆரம்பம் **Sep. 24** திங்கட்கிழமை

10வது ஆண்டில் காலடி பதிக்கும்

No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

(C-3858)

10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்

இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, (2ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

www.sikaram.lk Sikaram Academy

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3 - 5 DAYS
(C-3873)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.

தொடர்பு: **0763836129**

(6741)

## Place available for Rent

Suitable Place For Running a clinic in The Center of Jaffna Town. With all Needed Facilities.

enquring office, Rooms, Halls, Parking Area, etc

Contact : 077 703 3039, 076 151 7100

(C-3877)

## விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச்சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 075 643 4535 / +0016478919714

(6755)

## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி

## DIPLOMA IN ENGLISH with PERSONALITY DEVELOPMENT

(06 மாதங்கள்)

ஆரம்பம் : 22.09.2018 மதியம் 12.30 மணி
(வார இறுதி நாட்களில் நடைபெறும் பாடநெறி)

வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு

E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166

web: www.ecitycollege.lk

(C-3881)

# Ahtus

Ahtus Enterprises (Pvt) Ltd

ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்

குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.



FARLIN

உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்



இல.30, கன்னாதிட்டி றோட், (வன்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel : 077 742 7322

(C-3882)

யாழ்ப்பாணத்தில் **காணி விற்பனைக்கு**

1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள்

# கற்பகவனம் 1 இயக்கச்சி


# கற்பகவனம் 2 எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் *

வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

**1 ஏக்கர் – 16 பரப்பு**
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜு மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**25 இலட்சம்**



**2 ஏக்கர் – 32 பரப்பு**
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜு மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்


**45 இலட்சம்**

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் **5 வருடங்கள் பராமரிப்பு** செய்து தரப்படும்!
- 30 அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

(C-3886)

**பொதுவான வசதிகள்**

உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல் · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்






சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778

551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Good Gift Property Developers (Pvt) Ltd

Reg. No.: PV 115306


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.